567


ஓம்

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கச] தாது—ஆடி [பரல்-கஉ


## திருவாசகம்

### கோயிற்றிருப்பதிகம்

பார்பத மண்ட மனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதே லரிய நின்மலா
நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளா
ரானந்த மாக்கு மென்சோதி.

பதவுரை :—

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்து(உம்)—(இந்த) நில உலகமும் (ஏனைய) உலகங்களுமாகிய பேருலகம் (Universe) முழுவதுமாய்த் தோன்றியும்

பரந்தது(உம்) ஓர் படர் ஒளிப்பரப்பே—(அங்ஙனம் தோன்றியபின்) அவ்வுலகங்களில் பரந்திருத்தலுமாகிய ஒப்பற்று எங்கும் நிறைந்திருக்கின்ற ஒளிப்பரப்பே

நீர் உறு தீயே—வெந்நீர் முழுவதும் பரந்து நிறைந்திருக்கின்ற வெம்மைபோல, புறக்கண்ணுக்குப் புலப்படாமல் உலக முற்றும் பரந்து நிறைந்திருக்கின்ற நுண்ணிய பொருளே

நினைவதேல் அரிய நின்மலா—அங்ஙனம் உலகில் பரந்து நிறைந்திருக்கின்ற உன்னை அவ்வுலகினோ டத்துவிதமாயும் உன்னின் வேறாயும் நின்று பசுபாசஞானங்களால் ஒருவர் அறியப்புகின்

அவரறிவுக்கு எட்டாது கடந்திருக்கின்ற மலங்களினின்று நீங்கிய அநாதி முத்தனே

நின் அருள் வெள்ளம் சீர் உறுசிந்தை எழுந்தது ஓர் தேனே—உனது அருள் முழுவதும் பதிந்து தீவிரதர சத்திநிபாதச் சிறப்பு வாய்ந்துள்ள உள்ளத்தினை உடையவர்கள் (உன்னோடத்துவித மாய் நின்று உன்னைப் பதிஞானத்தாலுணர்தல் பற்றி) அவர்களுடைய உள்ளத்தில் எழுவதாயுள்ள தேன்போன்ற இன்பப்பொருளே

திருப்பெருந்துறை உறை சிவனே—திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற சிவபெருமானே

ஆனந்தம் ஆக்கும் என்சோதீ—(எனது உள்ளத்திலும் நீ அங்ஙனம் உன்னுடைய தீவிரதர சத்திநிபாதத்தை நிரம்பச் செய்து திருப்பெருந்துறையில் வைத்து என்னை ஆண்டருளி) என்னைப் பேரின்ப வடிவமாகச் செய்த பேரொளிப் பொருளே

எனக்கு இங்கு உறவு உள்ளார் யார் அயல் உள்ளார் யார்—அவ்வாறு உன்னால் பேரின்ப மளிக்கப் பெற்ற எனக்கு இந்நில உலகில் உறவினராயுள்ளார் யார்? பகைவராயுள்ளார் யார்? (ஒருவருமில்லை என்றபடி).

## விளக்க உரை:—

பார்பதம் அண்டம் அனைத்தும் ஆய்த்தோன்றி—பார்=இந்நில உலகம்; பதம்=இடம். அது இங்கே சாதி ஒருமைப் பெயராய் ஏனைய உலகங்களைக் குறிக்கிறது. அண்டம் இந்த நில உலகமும் பிற உலகங்களும் சேர்ந்த பேருலகம் (Universe). பார் என்ற சொல்லுக்கு மண் (பிருதிவி) என்று பொருளும், அண்டம் என்ற சொல்லுக்கு வான் (ஆகாயம்) என்ற பொருளும் கொண்டும், பார்பதம் அண்டம் என்ற சொற்றொடரைப் பார் அண்டம் பதம் என மாற்றியும், மண்முதல் வான்வரையுள்ள அஞ்சு பூதங்களும் நிறைந்திருக்கிற இடங்கள் என்று பொருள் கொள்ளினும் பொருந்தும். "பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே" என்று அடிகள் வாழாப்பத்து முதலாவது பாட்டிற் கூறியிருத்தல் காண்க.

அனைத்தும்=முழுவதும்; எல்லாம். முளைத்து=தோன்றி. உம் தொக்கி நின்றது. மாயை கலந்திருக்கிற தூவெளி (ஞானாகாசம்) யிலிருந்து உலகங்கள் முழுவதும் தோன்றியதால் அடிகள் 'பார்பதமண்டம் அனைத்துமாய் முளைத்து' என்ற சொற்களால் சத்திகள் அடங்கியிருக்கிற ஒரு விதையிலிருந்து மரம் ஒன்று தோன்றுதல்போல, சத்தித் தொகுதிகளாயுள்ள தூவெளியிலிருந்து உலகங்கள் தோன்றின என்ற கருத்து குறிப்பிடப் பட்டது.

பரந்தது ஓர் படர் ஒளிப்பரப்பே—பரந்தது வினையாலணையும் பெயர். படர்=எங்கும் நிறைந்திருக்கின்ற பரப்பு=எள்ளில் எண்ணெய் போல் ஓரிடமும் ஒழியாது நிறைந்திருத்தல் (expanse). இந்தத் தூவெளியிலிருந்து மாயையின் காரியமாய் உலகங்கள் தோன்றிய பின்னும் அத்தூவெளி காரணரூபமாய் உலகங்கள் முழுவதிலும் பரந்து நிறைந்திருத்தலால், 'பரந்தது ஓர் படரொளிப்பரப்பே' என்றார்.

நீருறுதீயே—தீ என்பது இங்கே ஆகுபெயராய் அதன் குணமாகிய வெம்மையைக் குறிக்கிறது.

நினைவதேல் அரிய நின்மலா—பின்னே கூறுகிறபடி பதிஞானத்தாலன்றி சிவபெருமான் பசு பாசஞானங்களால் அறியப்படான் என்பார், 'நினைவதேலரிய நின்மலா' என்றார். நினைவதேல்—ஏல்=வருங்கால வினையெச்ச விகுதி. 'நினைவதே லரிய' என்பதைச் சிந்தை நினைவதேல் நினைவரிய என விரிக்க. "நினைப்பதாகச் சிந்தை செல்லுமெல்லை—தினைத்தனையுமாவதில்லை" என்று அடிகள் திருச்சதகம் 76-வது பாட்டிற் கூறியது காண்க.

சீர் உறுசிந்தை எழுந்தது ஓர் தேனே—சீர்=சிறப்பு; தீவிரதர சத்திநிபாதம் நிரம்பப்பெற்ற சிறப்பு: தீவிரதர சத்திநிபாதம் நிரம்பப்பெற்ற சிந்தை சிவகரணமொழிந்து சிவகரணமாக மாறிச் சிவமே யாதலால் 'சீருறுசிந்தை எழுந்ததோர் தேனே" என்று அடிகள் சிவபெருமானை விளித்தார். "சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை' என்றார் திருமூலரும். தேன் என்பது இங்கே தேன் போன்ற இனிமையைக் குறிக்கிறது. எழுந்தது—வினையாலணையும் பெயர். சீருறு சிந்தை எழுந்ததோர் தேன் என்பது உயிரில் விளங்கும் அருளொளியைக் குறிக்கிறது. மேலே கூறப்பட்ட தூவெளி விளங்கப்பெறுதலால் உலக முழுவதும் தனக்கு வேறாய்த் தன் கண்ணடங்கப்பெற்ற உயிர், பின்னர் தனக்குத் தரிசனமான அருளொளியில் அடங்கி அங்ஙனம் அடங்கின தானுந் தோன்றாத பொழுது அது அவ்வருளொளியில் சிவமாகிய முதலைக் காண்கிறது. இதுவே சிவதரிசனமாம்.

ஆநந்தம் ஆக்கும் என்சோதி—மேலே கூறப்பட்டவாறு அருளொளியில் சிவதரிசனஞ் செய்த உயிர், பின்னர் அச்சிவன் திருவடிகளை அடைந்து அச்சிவனிலடங்கிப் பேரின்பவாழ்வு அடைகிறது. இங்கே கூறப்பட்ட சோதி சிவனுடைய தனி ஒளியாகிய இன்ப ஒளி. இந்த இன்ப ஒளி தம்மிடம் விளங்கப்பெறுதலால் அடிகள் பேரின்பமடைதல்பற்றி 'ஆநந்தம் ஆக்கும் என் சோதி' என்றார்.

எனக்கு இங்கு உறவு உள்ளார் யார் அயல் உள்ளர் யார்—இங்கு=இவ்வுலகம். உள்ளார் என்பதை உறவு என்பதோடும் கூட்டுக.

சிவபெருமான் திருவடிகளை அடையப் பெற்றவர்கள் எல்லா உயிர்களையும் சிவன் எனவே காண்டலால் "யாருறவெனக் கிங்கு யார் அயலுள்ளார்" என்றார்.

அடிகள் இந்தப்பாட்டில் சிவபெருமானைப் "பார்பதமண்ட மனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப்பரப்பே" என்று விளித்தலால் தூவெளியும், "நின்னருள் வெள்ளச் சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே" என்று விளித்தலால் அருளொளியும், "ஆநந்தமாக்கு மென்சோதி" என்று விளித்தலால் சிவனுடைய தனிப் பேரின்ப ஒளியும் கூறப்பட்டன. தூவெளி அருளொளியில் அடங்கி அருளொளி சிவனுடைய தனிப்பேரின்ப ஒளியில் அடங்குகின்றது. சிவனிடத்தில் விளங்குவதாயுள்ள இந்த மூன்று ஒளிகளையும் திருமூலர்,

ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகி யென்னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோனுல கேழுங் கடந்தவத்
தண்சுட ரோமத் தலைவனு மாமே.

என்று **திருமந்திரம்** 221-வது பாட்டிலும்

தானந்த மாமென நின்ற தனிச்சுடர்
ஊனந்த மாயுலகாய் நின்ற வொண்சுடர்

என்று **திருமந்திரம்** 2081-வது பாட்டிலும் கூறியருளியது நோக்குக.

முதலாவது கூறப்பட்ட தூவெளி ஒளி தன்னிடம் விளங்கப் பெறுதலால் உயிர், மல நீக்கம் செய்கிற ஒளிவிளக்கமாகிய அறிவு விளக்கத்தையும், இரண்டாவது கூறப்பட்ட அருளொளி விளங்கப் பெறுதலால் பசுத்துவ நீக்கத்தையும் சிவத்துவ விளக்கத்தையும் அடையச் செய்கின்ற அன்பு விளக்கத்தையும், மூன்றாவது கூறப்பட்ட தனிப்பேரொளி விளங்கப் பெறுதலால் திருவடிப் பேற்றை அடையச் செய்கின்ற செயலாகிய இன்பவிளக்கத்தையும் பெறுகின்றது. அறிவு, அன்பு, செயல் மூன்றும் பேரின்ப அநுபோக இலக்கணங்களாக ஏனைய கோயிற்றிருப்பதிகப்பாட்டுக்களிற் போல இந்தப்பாட்டிலும் கூறப்பட்டன.

—மா. வே. நெல்லையப்ப பிள்ளை.

571

# இலக்கணமும் இலக்கியமும்:
# LANGUAGE AND LITERATURE

## கம்பரும் வள்ளுவரும்

[காரை நகர் திரு. சு. அருளம்பலம் அவர்கள்]

(சடுடு-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தசரதச் சக்கரவர்த்தியானவர் சூழ்ந்திருந்த அமைச்சர்களை நோக்கி, உலகத்திற் பிறந்தோன் இறப்பது திண்ணம் என்னும் உண்மையினை மறப்பானாயின் அவனுடைய மனமானது நன்னெறியை மேன்மேலும் விரும்பாது மிக்க தீவினையைப் புரிய அதனாற் பெரும் பாவம் விளைந்து நரகத் துன்பத்தை யடைய நேரும். ஆகையினாலே இறப்பென்னும் மெய்ம்மையை மறவாது துறவினை மேற்கொண் டொழுகின் பிறவியாகிய பெருங்கடலைக் கடக்கலாகும்.

"இறப்பெனு மெய்ம்மையை யிம்மை யாவர்க்கு
மறப்பெனு மதனின்மேற் கேடு மற்றுண்டோ
துறப்பெனுந் தெப்பமே துணைசெ யாவிடிற்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ"

என்று கூறினார். இங்கே 'இறப்பெனு மெய்ம்மை' எனக் கூறிய யாக்கை நிலையாமையை வள்ளுவர் 'நிலையாமை' என்னும் அதிகாரத்து,

"நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு"

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல"

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு"

"உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்னுங் குறள்களினாற் கூறினார்.

"பிறப்பெனும் பெருங்கடல்" என்று பிறவியைப் பெருங் கடலாகக் கம்பர் உருவகித்தது போலவே வள்ளுவரும்,

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்"

என்னுங் குறளில் பிறவியைப் பெருங்கடலாகக் கூறினர். பிறவியானது காரணகாரியத் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின் பிறவியைப் பெருங்கடலாகக் கூறினர். பிறவியைப் பெருங்கடலாக,

"பிறவியென்னும் பெருங்கடல் விடூஉ
மறவி நாவா யாங்குள தாதலின்" (11—24-25)

"நீங்கரும் பிறவிக் கடலிடை நீந்திப்
பிறந்து பிறந்து முழல்வோம்" (26—40-41)

என மணிமேகலையிலும்,

...... ......................"வீடுமுதலாம்
புணவன் பிறவிப் பெருங்கடல் நீந்துவார்க்கே"

எனத் திருவாய்மொழியிலும் கூறப்பட்டுள்ளது.

"தொல்லைநம் பிறவியெண்ணிற் றொடுகடன் மணலுமாற்ரு
வெல்லையவ வற்றுளெல்லா மேதிலம் பிறந்துநீங்கி"

என்னும் சிந்தாமணி யடிகள் ஈண்டுச் சிந்திக்கற்பாலன.

பிறவிக்குக் காரணமா யிருப்பது அவா ஆகும் என்பதனை,

"அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து"

என்பதால் இனிது புலனுகும். ஆகவே அவாவினைத் துறந்த ஞான்று பிறவிப் பெருந்துயரும் நீங்கும் என்பது தோன்றுகிறது. இக்கருத்தினை,

"அற்றது பற்றெனில்
உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில்
அற்றது பற்றே"

எனவரும் திருவாய்மொழியும்,

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது அறிகென் றருளி"

எனவரும் மணிமேகலை யடிகளும் வலியுறுத்துகின்றன. இதனைக் கம்பர் "பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்கத் துறப்பெனுந் தெப்பமே துணை" எனக் கூறினர். இவ்வாறே வள்ளுவரும் பிறவிக்கடலைக் கடப்பதற்கு இன்றியமையாத்

துணை துறவு என்பதனை 'துறவு' என்னும் அதிகாரத்தால் விளக்கினர்.

"பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு"

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்"

"பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்"

என்னுங் குறள்களினல் பற்றினல் பிறப்பு ஆவதையும் துறவினல் பிறப்பு நீங்குவதையுங் கூறியமை காண்க.

"ஆர்வவே ரரிந்தச் சணந்தி போய்
வீரன் ருணிழல் விளங்க நோற்றபின்
மாரி மொக்குளின் மாய்ந்து விண்டொடிச்
சோர்வில் கொள்கையான் ரேற்ற நீங்கினன்"

எனவரும் சிந்தாமணியால் அச்சணந்தி என்போன் ஆசையென்கின்ற பிறவிவேரை யரிந்து வீரன்தாள் நிழலை நோற்றபின், அக்கொள்கையான் விண்டொழ திருமேனியுடன் மறைந்து பிறவி நீங்கினன் என்னும் தவத்தினல் பிறவி நீங்கிய தன்மை ஈண்டு அறியத்தக்கது.

இன்னும் சக்கரவர்த்தியானவர், ஆன்மாவானது பிறவியென்னுஞ் சிறையினின்றும் பிரிந்து செல்வதற்குத் துறத்தலேயன்றி அத்துறவினை மேற்கொள்ளுதலே நன்று, அதுவே இருணீக்கி இன்பமடைதற்கு இயைந்த நெறி எனக் கருதுகின்ற தெளிந்த அறிவும் வேண்டும் என்றார். அது,

"அருஞ்சிறப் பமைவருந் துறவு மவ்வழி
தெரிஞ்சுற வெனமிகுந் தெளிவு மாய்வரும்
பெருஞ்சிறை யுளவெனிற் பிறவி யென்னுமிவ்
விருஞ்சிறை கடத்தலி னினியதி யாவதே"

என்பதாகும். நிலையில்லாதனவாகிய பொருள்களிடத்துள்ள பற்று நீங்கிய துணையானே, அப்பொருள்களை இம்மைக்கண் தேடுதலானும் காத்தலானும் இழத்தலானும் வருவனவும், மறுமைக்கட்பாவத்தான் வருவனவுமாய இருவகைத் துன்பங்களும் நீங்கி இன்பமெய்தலாம். ஆகையினல் பொருள்களிடத்துள்ள் பற்றினை விடுதல் வேண்டும் என்பதுபற்றி "அருஞ்சிறப் பமைவருந் துறவும்" என்றார். இவ்வாறே வள்ளுவரும்,

"யாதனின் யாதனி னீங்கியா னோதல்
அதனி னதனி னிலன்"

என்று பொருட்பற்றைவிடல் வேண்டுமெனவும் அதுவே இன்பமெனவுங் கூறினர்.

"அருஞ்சிறப்பமைவரும் துறவு" என்பதனுல் அடைதற் சரிதாகிய (வீடுபேற்றை) மோட்சத்தைப் பெறுவதற்குக் காரணமாகிய துறவு என்று துறவினுல் வீடுபேற்றை யடையும் வகையைக் கூறினர். சிறப்பு—மோட்சம் என்னும் பொருளாதலே,

"சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு"

"பிறப்பென்னும் பேதமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு".

என்னுங் குறள்களிலும் காணலாகும். சிறப்பு என்பதற்கு வீடு என்றும் 'எல்லாப் பொருள்களினும் எல்லாப் பேற்றி னுஞ் சிறந்தமையின் வீடு சிறப்பெனப்பட்டது என்றும்' பரிமேலழகர் உரை கூறியமை கவனிக்கற்பால.

வீட்டினைக் கொடுக்கும் துறவு எனக் கம்பர் கூறியது போலவே வள்ளுவரும்,

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்"

என்னுங் குறளினுல் இருவகைப்பற்றையும் துறந்தார்க்கே வீடுளதென்று கூறினர்.

"தெரிஞ்சுற வெனமிகுந் தெளிவும்" என்னும் பொருளைத் திருவள்ளுவனர் 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்தாற் கூறினர். தெளிவு-மெய்யுணர்வு. மெய்யுணர்வின்மையினலே பிறப்பு உளதாகும் என்பதனை,

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு"

என்னுங் குறளினுலும்,

மெய்யுணர்வானது பிறப்பினைநீக்கி வீட்டினைக் கொடுக்கும் என்பதனை,

"இருணீங்கி யின்பம பயக்கும் மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு"

"ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து".

என்னுங் குறள்களினாலுங் கூறினர். இருள்-பிறப்பு; இன்பம்-வீடு.

கம்பர்,

அருஞ்சிறப் பமைவருந் துறவு மவ்வழி
தெரிஞ்சுற வெனமிகுந் தெளிவும்

எனத் துறவினை முன்னும் தெளிவினைப் பின்னுங் கூறியது போலவே வள்ளுவரும், 'துறவு' என்னு மதிகாரத்தை முன்னும் 'மெய்யுணர்தல்' என்னு மதிகாரத்தைப் பின்னுங் கூறிய ஒப்புமை இங்குக் கவனிக்கத்தக்கது. இவ்வாறு வள்ளுவரும் கம்பரும் துறவு மெய்யுணர்தல் என்ற முறையிற் கூறினாராயினும் துறவற நெறியே வீட்டினை யடையும் வழி என்னும் தெள்ளுணர்வு பிறந்தாலன்றி துறவினை மேற்கொள்ளுதல் இயலாதாகலின் மெய்யுணர்தல் துறவு என்ற முறையிற் கொள்ளுதல் சாலும்.

ஈண்டுப் பிறவித்துன்பம் நீங்குவதற்கு மெய்யுணர்வும் துறவும் இன்றியமையாதன எனக் கூறியதுபோலவே திருவாய்மொழியிலும்,

"பிறவித் துயரற ஞானத்துள் நின்று
துறவிச் சுடர்விளக்கம் தலைப்பெய்வார்"

எனக் கூறியிருத்தல் கவனிக்கற்பாலது. இன்னும்,

"இழைத்ததீ வினைதனைக் கடக்கு மெண்ணுறத்
தழைத்தபே ரருளுடைத் தவத்தி னாகுமேற்
குழைத்ததோ ரமிர்தினைக் கோடனீக்கிவே
றழைத்ததீ விடத்தினை அருந்த லாவதோ"

என்று, தசரத சக்கரவர்த்தி தான் செய்த தீவினையை நீக்குதல் முதலாய எல்லா நன்மைகளையும் தவத்தினால் எய்தக்கூடியதாயிருக்க, அதனைவிட்டு ஏற்புடைத்தாகாத வேறு தொழில்களைச் செய்ய முயலுதல் அமிர்தத்தினைக் கொள்ளாது நஞ்சினை உட்கொள்ளுவது போலும் எனக் கூறினார். தாம் தாம் விரும்பிய விரும்பிய காரியங்களைப் பெறுதல் தவத்தினால் ஆகும் என்பதனை வள்ளுவர்,

"வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்"

என்பதனாலும் 'இழைத்த தீவினைதனைக் கடக்கும் ஆற்றல் தவத்தினால் ஆகும்' என்பதனை,

"தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்"

என்பதனுலுங் கூறினர். தீவினையைக் கடத்தல் தவத்தினுல் ஆகும் என்பது இப்பகுதிக்கு,

"அநித்தமாய் மூவகைத் துன்பத்ததாய் உயிரின் வேருய உடற்கு வருத்தம் வருமென் றொழியாது தவத்தினைச்செய்ய, பிறப்புப்பிணி மூப்பிறப்புக்களான் அநாதியாகத் துன்ப மெய்தி வருகின்ற உயிர் ஞானம் பிறந்து வீடுபெறுமாகலின் தவஞ்செய்வாரைத் தங்கருமஞ் செய்வாரென்று எழுதிய பரிமேலழகர் உரையான் விளங்கும்.

இங்கே 'தழைத்த பேரருளுடைத் தவம்' எனத் தவத்திற்கு அருள் இன்றியமையாத குணமாகக் கூறியிருத்தல் போலவே வள்ளுவரும்,

"உற்றநோய் நோன்ற லுயிர்க்குறு கண்செய்யாமை
அற்றே தவத்திற் குரு"

என்னுங் குறளில் உயிர்க்குறுகண் செய்யாமை யாகிய அருளுடைமையைத் தவத்தின் வடிவமாகவே கூறியருளினர்.

தவத்தினுலே தீவினையைப் போக்குதலை,

"விளக்குப்புக விருண் மாய்ந்தாங் கொருவன்
தவத்தின்முன் னில்லாதாம் பாவம்"

என்னும் நாலடியாராலும் அறியலாகும். இவ்வுண்மை,

'அல்லவை தேய அறம்பெருகும்' எனத் திருக்குறளில் கூறியிருத்தலுங் காண்க. தேய்தல் தன் பகையாகிய அறம் வளர்தலினுலே தனக்கு நிலையில்லாமையால் தீவினை மெலிதல்.

"கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுறப்
பிச்சமுங் கவிகையும் பெய்யு மின்னிழ
நிச்சய மன்றெனில் நெடிது நாளுண்ட
வெச்சிலை நுகருவ தின்ப மாகுமோ"

என்று சக்கரவர்த்தி செல்வம் நிலையில்லாதிருத்தலினுலே இதனை விட்டு மறுமையை நாடவேண்டு மென்றார். இங்கே கூறிய செல்வ நிலையாமையைத் திருவள்ளுவர், "அற்காவியல் பிற்றுச் செல்வம்" எனச் சுருக்கமும் அழகும் பெறக் கூறினர். ஈண்டு,

"ஒருநாயகமா யோட வுலகுட னுண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்

பெருநாடு காண விம்மையிலே பிச்சைதாங் கொள்வர் ·
திருநாரணன்றாள் காலம்பெறச் சிந்தித் துய்மினோ''

என்னுந் திருவாய்மொழிப்பா நினைவு கூரற் பாலது.

இவ்வாறு செல்வநிலையாமையையும் தவத்தின் மேன்மையையும் கூறிய சக்கரவர்த்தி நற்கதி பெறவேண்டித் தவஞ் செய்வதற்குச் செல்வதற்கு நுங்கருத்து யாது,

"ஆதலா லிராமனுக் கரசை நல்கி, யிப்
பேதமைத்தாய் வரும் பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேன்
யாதுநுங் கருத்தென வினைய கூறினான்''

என்று மந்திரிமாரை நோக்கிக் கூறினார். பேதமை—விபரீத உணர்வு. இஃது அவா, வெகுளி முதலாய குணங்களுக்குக் காரணமாதலுடைமையின் பிறப்பிற்குக் காரணமாக்கி "பேதமைத்தாய் வரும்பிறப்பு" எனக் கம்பர் அருளினார். வள்ளுவரும் இவ்வாறே 'பிறப்பென்னும் பேதமை' எனக் காரியத்தைக் காரணமாக உபசரித்துக் கூறினார். பேதமையினிலக்கணத்தை,

"பேதமை யென்பது யாதென வினவின்
ஓதிய விவற்றை உணராது மயங்கி
யியற்படு பொருளான் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கேட்டது தெளிதல்''

எனவரும் மணிமேகலையால் அறியலாகும். (தொடரும்)

---

# அகப்பாட்டு

[இ. சிவகுருநாதன்—"தமிழ்ச்சேய்"]

அகப்பாட்டு-அகநானூறு. அகநானூறு-பழந்தமிழ் நூல்; அன்புக்காதலரின் இன்பவாழ்வை எடுத்துரைக்கும் இனிய தமிழ் நூல். அதன்கண், யாண்டும் இயற்கை மணம் கமழுகிறது; எங்கணும் இயற்கை அழகு ஒழுகுகிறது; தமிழர் வாழ்வு முறை பொலிகின்றது.

தமிழர்கட்கு, வயல் மணி கொழித்தது; கடல் முத்து வழங்கியது; காடு கொழுத்து நாடு செழித்தது; முகில் தவழ்ந்து மழை பொழிய மலை துணை செய்தது. இங்ஙனம் நானிலமும் தமிழ் நாட்டை மேனிலமாக்கியது. தமிழர் மகிழ்ந்து

வாழ்ந்தனர். அவர்தம் மகிழ்ச்சிப்பொங்கல் அகப்பாட்டின் கண் யாங்கணும் பொங்கி வழிகிறது.

அகப்பாட்டினை இயற்கைக் காட்சி நிலையம் என்கோ? இன்பக் களஞ்சியம் என்கோ? காதற் கடலின் கரை யென்கோ? வாழ்வு முறையின் வைப்பு என்கோ? யாதென்று அறைகுவல்? என்னென்று இயம்புவல்!

அதன் பெருமை பெரிது! பெரிது!! அலைகடலினும் பெரிது! நிலைமலையினும் நெடிது! அப்பாட்டுக் காட்டும் ஒரு தொழி லோவியத்தைக் காண்மின்.

நெய்தல்

நெடுங்கயிறு [1]வலந்த குறுங்கண் ணவ்வலைக்
கடல் [2]பா டழிய வினமீன் முகந்து
துணைபுண ருவகையர் பரத மாக்க
ளிளையரு முதியருங் கிளையுடன் றுவன்றி
[3]யுப்பொய் உமணர் அருந்துறை போக்கு
[4]மொழுகை நோன்பக டொப்பக் குழீஇ
[5]யயிர்திணி யடைகரை யொலிப்ப வாங்கிப்
பெருங்களந் தொகுத்த உழவர் போல
விரந்தோர் வறுங்கல மல்க வீசிப்
[6]பாடுபல வமைத்துக் [7]கொள்ளை சாற்றி
[8]கோடுயர் திணிமணற் றுஞ்சுந் துறைவ!

[முடங்கிக் கிடந்த நெடுஞ் சேரலாதன் அக. களிறு 30]

நெய்தல் கடலும் கடல்சார்ந்த இடமும் அல்லவோ! கடலின்கண் வாழ்வார் எவர்? வலைஞர். வலைஞரின் வாழ்க்கை என்னை? மீன் பிடித்தலன்றோ! அவ்வாழ்வை முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரல் எனும் முதுபுலவர் மொழிகின்றார். எங்ஙனம் மொழிகின்றார்? பாட்டு ஓவியமாகக் காட்டுகின்றார். பாட்டாகப் படிமம் எடுத்து விளக்குகின்றார்.

அன்பர்களே! இப்பாட்டைக் காணுங்கள். கருதுங்கள். காணக் காணக் கண்குளிரும். கருதக் கருத உள்ளம் உவகை கடந்து மிளிரும்.

---

குறிப்பு:—1. வலந்த - கட்டப்பட்ட. 2. பாடு - பெருமை. 3. உப்பொய் - உப்புச் செலுத்தும். 4. ஒழுகை - வண்டி. 5. அயிர் - மணல். 6. பாடு - கூறு. 7. கொள்ளை - கூட்டமாக. 8. கோடு - கரை.

வலைஞரின் வாழ்வுத் துணை யாது? வலையன்றே! முன்னர் வலையைக் கூறுகிறார். வலை நெடிய கயிற்றால் கட்டப்பட்டதாம். குறுகிய கண்ணையுடையதாம். வலைஞர் வலைகொண்டு கடற்கண் புகுகின்றார்கள்; வலை வீசுகிறார்கள். வலையிடை கெண்டை, வரால் முதலிய இனப்பல மீன்கள் நனிப்பல புகுந்தன. வலைகள் மீன்களை வாருவதால் கடலது பெருமை அழிகிறதாம். கடலுக்குப் பெருமை செய்வன மீன்கள் போலும்! என்னே மீனின் மேன்மை! பரிமேலழகர், "நெடுங் கடலுந் தன்னீர்மை குன்றும்" என்னும் குறளுரைக்கண் "தன்னீர்மை குன்றுதலாவது நீர்வாழ் உயிர் பிறவாமையும், மணிமுதலாயின படாமையும்" என்றுரைத்ததும் ஈண்டு அறியற்பாற்று.

அம்மீன்கொண்ட வலையைப் பரதவர் (பரதவர்—வலைஞர்) கரைக்கண் இழுக்கின்றனர். வலையிடை ஒரு மீனுதல், இரு மீனுதல் இருப்பினன்றோ, ஒருவரால் இழுக்க ஒல்லும்! கடல் பெருமை குன்ற வலை பலமீன்களைக் கொண்டதாம். ஆதலின் பலர் கூடுகின்றனர். யார், யார்? இளைஞராம், முதியராம்; மற்றும் துணையொடு புணர்ந்த உவகையராம்.

அன்பர்களே! கூர்ந்து நோக்குங்கள். வலையிழுக்க எவர் எவர் கூடுகின்றனர்? உற்றாரும் உறவினரும் குழுமுகின்றனர். பரதவருக்கு உவகை ஊட்ட மனைவியரும் உடன்கூடுகின்றனர் போலும். அனைவரும் ஒருங்கே குழீஇ அலைகடலினின்றும் வலைமீன்களை இழுக்கின்றனர்.

இவர்கள் வலையிழுப்பதற்கு ஆசிரியர் ஓர் உவமை கூறுகின்றார். என்னை?

"உப்பொய் உமணர் அருந்துறை போக்கும்
ஒழுகை நோன்பக டொப்ப" உவமையை ஊன்றி உணர்மின். கடற்கரைக்கண் உப்பு விளைகிறதல்லவா? அவ்வுப்பை உமணர் பகடுபூண்ட பண்டிகளில் கொண்டு வருவர். உப்புப் பொதியை மணலில் இழுத்துவரும் பகடு எவ்வளவு ஆற்றலுடையதாய் இருத்தல் வேண்டும். அப்பகடொத்தவராம் பரதவர்.

என்னே! நெடுஞ்சேரலின் அறிவுடைமை! நெய்தல் நிலத்தொழிற்கு நெய்தல் நிலத்தொழிலையே கூறும் உவமையின் உயர்வு!

உப்பு இழுக்கும் பகடொப்பப் பலருங்கூடி வலையைக் கரைக்கண் இழுக்கின்றனர். இழுக்குங்கால் என் செய்கின்

றனர்? அலைகடல் ஒலியும் அவியுமாறு ஒலிக்கின்றனர். பெருஞ்சுமை இழுப்பார் ஆரவாரித்தலை இன்றும் காண் கின்றோமல்லவா!

அங்ஙனம் ஒலிப்ப வாங்கிய மீன்களைக் கரைமணற்கண் குவிக்கின்றனர். கொண்டுவந்து குவித்த மீன்களைப் பரதவர் இரப்பவருக்கு இல்லை யெனாது ஈதல் செய்கின்றனர். இவர் தம் கொடைச்சிறப்புக்குக் கூறும் உவமைச் சிறப்பை உற்றுக் காண்மின்!

"பெருங்களந் தொகுத்த உழவர் போல
இரந்தோர் வறுங்கல மல்கவீசி"

வேளாண் உழவர் வித்திப் பயிரிட்டு, விளைந்த பொருளை, களத்தின்கண் கொண்டுவந்து குவிப்பர்; அவர் வித்தியது ஆயிரமாக விளைந்ததைக் கண்டு கழிபேருவகை கொள்வர்; மகிழ்ச்சி நிகழும் ஞான்று உள்ளம் இனிய இயல்பொடு இருத்தல் இயல்பல்லவா? அம்மகிழ்ச்சி யுள்ளம் அன்பு, அருள், இன்சொல், இரக்கம் முதலிய இன்ப ஊற்றுக்களை இடையறாது சுரக்குமன்றே!

உழவர் மகிழ்ச்சியொடு களத்திருந்த ஞான்று இரவலர் பலர் இரந்து செல்வர். அவ்விரவலர்க்கு இல்லையெனாது ஈத்துவப்பர் உழவர். இவ்வழக்கை இன்றும் கண்டுகொள்ளலாம்.

ஊர்களிலாதல், பிறவிடங்களிலாதல் இருந்து அளிக்கும் ஈகையைச் சுட்டாது, உழவர் களந் தொகுத்த ஈகையைச் சுட்டிய நெடுஞ்சேரலின் நுட்பமதி என்னே! என்னே!! அவர்தம் வியத்தகு அறிவை எக்கண்கொண்டு காண்பல்! எவ்வெழுத்தால் எழுதுவல்!

அப்பெருங் களந் தொகுத்த உழவர் போல வலைஞரும் மீன் வழங்கி மேன்மை யுறுகின்றனர். யாங்ஙனம்? மீன் வேட்ட இரவலர் கடலருகே குவிந்துவந்தனர். வலைஞரைக் கண்டு இரந்தனர். வலைஞர் மீன்பல கொண்ட மகிழ்ச்சியால் அவரது வறியகலம் நிறையுமாறு வழங்கினர்.

இரவலர்க்கு இல்லையெனாது ஈத்துவந்த வலைஞன் பின் என்செய்கிறான்? ஏனை மீன்களைக் கூறுகூறாக வைக்கின்றான். கூட்டம் கூட்டமாகக் கூடுகிறான். "மீனோ மீன்! மீனோ மீன்" என்று கூவி விலைகூறி விற்கின்றான். விலையிட்டு விற்ற வலைஞன் அக்கரைக்கண் துயில்கின்றனனும்.

கடுமழையினும், கொடுவெயிலினும், நெடும்பனியினும் நீர்நின்று தவஞ்செய்யும் நிமலர் போல, இரவும் பகலும் என்

றும்நீர்நின்று மீன்பிடிக்கும்வலைஞர் கடற்கரைக்கண் துயிலுத லும் இயல்பல்லவோ!

ஒவாப் பற்றுடை நற்றமிழ்ச் செல்வரீர்!

இத்தாவா நல்லிசைத் தண்டமிழ்ப் புலவரின் நுண்ணிய மதியை நுனித்து நோக்குமின்! ஒரு தொழிற்கூற்றை ஓவிய மாக வரைந்துகாட்டும் வாலறிவை வாயார வாழ்த்துமின்! நெஞ்சார நினைமின். பண்டைப்பாவலர் பெருமை பகரற் பாற்றே! பழந்தமிழ் நூலின் விழுப்பம் எழுத்தால் எழுதல் எளிதோ!

---

# குறுந்தொகை

## மூலமும் விளக்க உரையும்

[இலங்கையடிகள் வித்துவான் இரா. சிவ சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

## குறிஞ்சி

வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவன் வாராமையால் நல னழிந்து வேறுபாடுற்ற தலைவியை நற்றாயும் செவிலியும் கண்டு இஃதெதனாலாயிற்றோ எனக் கட்டுவிச்சியை வினவிக் குறிகேட்ட போது, தலைவியின் வேறுபாட்டிற்குக் காரணம் பிறிதோர் தெய்வம் என்று கட்டுவிச்சி கூற, அதனைக்கேட்டு "அஃதல்ல; யானறிவன் உண்மையை", எனத் தோழி அறத்தொடு நிற்றல்.

இதனை, வரைவிடை வைத்துப் பிரிந்த தலைவன் பிரிவு நீட்டித்த வழித் தலைவி தன் தோழி வினவாக்காலத்துப் புலந்து கூறியது என்றும் கூறுவர்.

இச்செய்யுளை முற்கூறிய துறைக்கு உதாரணமாக்குதலே பொருந்தும்; பின் கூறியதுமாகும்.

வெள்ளி வீதியார் பாடியது

26. அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை
பூக்கொய் மகளிரிற் றோன்று நாடன்
தகாஅன் போலத் தான்றீது மொழியினும்
தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே;

தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய்
வரையாடு வன்பறழ்த் தந்தைக்
கடுவனு மறியுமக் கொடியோ னையே.

என்பது நற்றாயும், செவிலித்தாயும் தலைமகளது வேறுபாடு கண்டு இஃது எற்றினானாயிற்றென்று கட்டுவிச்சியை வினவிக் கட்டுக்காண் கின்றகாலத்துத் தலைமகள் வேறுபாட்டிற்குக் காரணம் பிறிதோர் தெய்வமென்று கூறக்கேட்டுத் தோழி அறத்தொடுநின்றது.

பதவுரை:—

அரும்பு அற மலர்ந்த—அரும்பில்லாமல் முற்றும் மலர்ந்த, கருங்கால் வேங்கை—வலிய (கரிய) தண்டினையுடைய வேங்கை மரத்தின், மேக்கு எழு பெரும் சினை இருந்த தோகை—மேல்நோக்கி எழுந்த பெரிய கிளையில் அமர்ந் திருந்த மயில், பூக்கொய் மகளிரில் தோன்று நாடன்—பூக்கள் பறிக்கும் பெண்களைப் போலத்தோன்றும் குறிஞ்சி நிலத் தலைவன், தகாஅன் போல—ஒழுக்க மில்லாக் கீழ்மகனைப் போல, தான் தீதுமொழியினும்—தான் (எனக்கு) தீங்கு விளைப்பதாகிய பொய்யான வார்த்தைகளைக் கூறினும், தன் கண் கண்டது பொய்க்குவது அன்றே—தன் கண்ணால் அவனுடைய களவொழுக்கத்தைக் கண்டதைப் பொய்கூறல் அறமன்று அல்லவோ? தே கொக்கு அருந்தும்—இனிய மாம்பழத்தை யுண்ணும், முள் எயிற்றுத் துவர் வாய்—முள் ளைப்போன்ற கூரியபற்களையும் சிவந்த வாயையுமுடைய, வரையாடு வன் பறழ் தந்தைக் கடுவனும்—மலையில் விளையாடும் வலிய குட்டிக்குத் தந்தையாகிய ஆண்குரங்கும், அக்கொடி யோனை—வரைந்து கொள்வதாகக் கூறிப் பிரிந்துசென்று எனக்குத் துன்பம் விளைத்த வஞ்சகனை (தலைவனை), அறியும்—அறிந்திருக்கும். ஏ-அசை.

'தன் கண் கண்டது பொய்க்குவதன்றே' என்பதற்கு, "அவன் என்னை ஒருவரும் காணாவிடத்துக் கூடியதனால் கரிகூறுவார் ஒருவரு மில்லை என்று துணிந்து பிரிந்து இன்னல் விளைப்பானாயினும், அவன் என்னைக் களவு ஒழுக்கத்தில் கண்டது அவன் கண்ணிற்கும், என் கண்ணிற்கும் பொய்யாவதல்லவே" என்றும் கூறலாம். அதனால் அவன் ஒழுக்கம் பொய்யாது என்பது கருத்து.

கருங்கால்—வலிய தண்டு. மேக்கு—மேலாக. சினை—கிளை. தோகை—மயில்—சினையாகு பெயர். மகளிரில் தோன்றும்—ஒப்புப் பொருள். தகாஅன்—தகுதி, நற்குணம் இல்லாதவன். தீது—பொய். தேம்—இனிமை. கொக்கு—மாமரம்—இங்குப் பழத்தைக் குறித்தது; முதலாகு பெயர். கொக்கு—துளுவநாட்டுச் சொல்.

"கொக்குதனைச் சட்டிதனில் கொன்றவித்தநேமி"—திருப்புகழ்.

"கொற்ற வருணனை நின்றன் றுழக்கிய
கொக்குருவை"—(செந்தில்—நிரோட்டகம்—காப்பு)

முள்ளெயிறு—உவமைத்தொகை. துவர்—செந்நிறம். "தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத் துவர்வாய் வரையாடு வன்பறழ் தந்தைக் கடுவன்"—இதனோடு "கனிதொடர் குரங்கு' என்பது காண்க. குரங்கின் இயற்கைத் தன்மை கூறியவாறு. வரை—இருமடியாகு பெயர். பறழ்—குரக்குக்குட்டி.

"பார்ப்பும் பறழுங் குட்டியுங் குருளையும்
கன்றும் பிள்ளையு மகவு மறியுமென்
றென்பதும் குழவியோ டிளமைப் பெயரே.

(தோல்.மர 1)

கடுவன்—ஆண் குரங்கு; மந்தி—பெண் குரங்கு.
"குரங்கினேற்றைக் கடுவ னென்றலும்"

—(தோல்—பொருள்—மரபு. 68)

மேற்கோள் விளக்கம்:—

1. 'கருங்கால் வேங்கை'—குறுந்தொகை. 47

2. "அரும்பற மலர்ந்த............கொடியோனையே"--இச்செய்யுள், "தலைவி வருந்தித் தோழி வினவாக் காலத்து அவன் தவற்றை வரைவிடை வைத்தலின் ஆற்றாமைக்கு அறிவித்தாள்" என்பதற்கு மேற்கோள். (தோல். களவு. பக். 478-9)

3. "குரங்குக்குட்டியை மகவும் பிள்ளையும் பறழும் பார்ப்பும் மெனப்பட்ட இந்நான்கும் குட்டியென்னும் பெயர்போல அக்குரங்கின் பகுதிக்கு உரியவாம்" என்பதனால் பறழ்க்குத்தந்தை என்று கூறியதற்கு மேற்கோள், "வரையாடுவன் பறழ்த் தந்தை" என்பது

—(தோல்—மர. பக் 540)

1. 'தேக்கொக் கருந்தும்'—'முத்து நிரை யொத்த'—பிரதிபேதம்

"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை"

(அ) "அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை"—புறம் 202-18.
(ஆ) "கருங்கா லின வேங்கை" —(திணைமாலை. 26)
(இ) "அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை" —(நற். 112)
(ஈ) "கருங்கால் பொன்னிணர் வேங்கை" —(நற். 151)
(உ) "சுரும்புண விரிந்த கருங்கால் வேங்கை" —(நற். 168)
(ஊ) "அரும்பு வாயவிழ்ந்த கருங்கால் வேங்கை" —(நற். 257)
(எ) "கருங்கால் வேங்கை யூறுபட" —(நற். 217)

"கருங்கால் வேங்கை; மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை"—

"பாங்கருறு வேங்கையின் பனிமலர்ச்சினை
மேவு பைந்தோகை"
—(தணிகைப் பிள்ளைத் தமிழ்—சப்பாணி—4).

"கருங்கால் வேங்கை ……………ஞேன்று நாடன்"—

"விரிந்த வேங்கைப் பெருஞ்சினைத்தோகை
பூக்கொய் மகளிரிற் ஞேன்று நாடன்" —(ஐங்குறு. 297)

என்பதோடு ஒப்பிட்டுக் காண்க.

இறைச்சி:—

வேங்கை மரத்தின் மேலிருந்த மயில் பூக்கொய் மகளிரைப் போலத் தோன்றும் என்றதனுல், தலைவன் மனத்தால் நன்மை புரிவானல்லானுயினும் வெளித்தோற்றத்தால் நன்மை செய்வான்போற் காணப்படுகின்ருன் என்பது குறிப்பா லுணர்த்தியவாரும் என்க.

கட்டுவிச்சி:—

இவளைக் கட்டறிமகடூஉ என்பர். கட்டுப்பார்த்தலை அறிந்த மகள் என்க. கட்டுப்பார்த்தலாவது ஒரு சிறு முறத்தில் நெல்லைப் பரப்பிக் குறிசொல்லல்.

"இதுகாண்மி னன்னைமீரிக் கட்டுவிச்சி சொற்கொண்டு நீர்,
எதுவானுஞ் செய்தங்கோர் கள்ளுமிறைச்சியுந் தூவேன்மின்,
மதுவார்துழாய் முடிமாயப்பிரான் கழல் வாழ்த்தின,
லதுவேயிவளுற்ற நோய்க்கு மருமருந்தாகுமே"
—(திவ். திருவாய் 4—63)

கட்டுவிச்சியார் கட்டுக்கூறும் முறையினைத் திருமங்கை மன்னன் தமது சிறியதிருமடலில்,

"காராற் குழற்கொண்டைக் கட்டுவிச்சிக் கட்டேறிச்
சீரார் சுளகிற் சிலநெல் பிடித்தெறியா
வேரா விதிர்விதிரா மெய்சிலிராக் கைம்மோவாப்
பேரா யிரமுடையானென்ருள் பெயர்த்தேயும்
காரார் திருமேனி காட்டினுள்."

என்று கூறியுள்ளதாலும், திருக்கோவையாரில்

"குயிலிதன்றேஎன்ன லாஞ்சொல்லி கூறன் சிற்றம்பலத்தான்
இயலிதன்றே என்னலாகா இறைவிறற் சேய்கடவும்
மயில் இதன் றேகொடி வாரணங்காண்கவன் சூர்தடிந்த
அயிலிதன்றே இதன்றே நெல்லிற்ருேன்றும் அவன் வடிவே"

என்பதாலும், அதனுரையானும் அறிக.

மேய்ப்பாடு—எள்ளல் பற்றிய நகை. என்னை?

"எள்ள விளமை பேதமை மடனென்
றுள்ளப்பட்ட நகைநான் கென்ப"
என்பராகலின். —(தோல். மெய்ப். 4)

பயன்—அறத்தொடு நிற்றல்.

# ஙம்முதல்

[வித்துவான் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள்]

உலக வழக்கிலுள்ள ஒவ்வொரு மொழியிலும் சொற்களும் சொற்றொடர்களும் நாளடைவில் மாறுபடுகின்றன. அம்மாற்றம் தமிழில் மரூஉ, திரிபு, சிதைவு, போலி எனப் பல்பெயராற் கூறப்படும். மொழிகளின் வடிவுமாறவே அவற்றின் முதலிடைகடை யெழுத்துக்களும் மாறுபடுகின்றன என்பது சொல்லாமே போதரும்.

பிறமொழிகளில் மொழி முதலிடைகடை யெழுத்துக்கட்கு வரம்பில்லை. தமிழிலோ அவ்வரம்புண்டு. ஒரு தனிமொழியின் அல்லது தனித்து வழங்கக்கூடிய மொழியின் முதலெழுத்து மற்றோரெழுத்தாய்த் திரியின், அத்திரிபெழுத்தே முதலெழுத்தாய்க் கொள்ளப்படும், இலக்கணம் இடந்தரின்.

(உ-ம்). நண்டு — ஞண்டு.

அரைஞாண் (அரைநாண்), பைஞ்ஞீலி (பைந்நீலி), சேய்ஞலூர் (சேய்நல்லூர்) முதலிய தொடர்மொழிகளிலுள்ள வருமொழிகள் ஞாண், ஞீலி, ஞலூர் எனத் தம் திரிந்த வடிவிலும் தனித்து வழங்குந் தகுதி சிறிதுடைமையின் அவற்றின் முதலிலுள்ள திரிபெழுத்துக்களும் மொழிமுதலெழுத்துக்களாகக் கொள்ளப்படல் கூடும். ஆனால், ஒரு தொடர்மொழியிலுள்ள வருமொழியின் முதலெழுத்து மொழிமுதலல்லா எழுத்தாகத் திரியின், அவ்விதி முதல் இயல்பு முதலாகக் கொள்ளப்படாது. ஈண்டு இயல்பு முதல் விதி முதல் என்பவற்றை இயல்பீறு விதியீறு என்பவற்றை யெண்ணியுணர்க.

(உ-ம்). அல் + தாலம் = அற்றாலம்.
விண் + நாடு = விண்ணாடு.

இவற்றில் றா, ணா, என்னும் விதி முதல்கள் மொழி முதலெழுத்தாகாமை யுணர்க.

தொல்காப்பியர் சிறந்த ஆராய்ச்சியுடையராதலின், ஙகரம் வருமொழியின் விதிமுதலாய் மட்டும் வருவது கண்டு அதை மொழிமுதலெழுத்தாகக் கூறியிலர். நன்னூலாரோ அவ் வாராய்ச்சியின்மையின், விதிமுதலாய் வந்த ஙகரத்தை இயல்பு முதலென மயங்கிக் கூறினர்.

ஙகரம், அங்ஙனம், இங்ஙனம், உங்ஙனம், எங்ஙனம், யாங்ஙனம் எனச் சுட்டு வினாமுதற் றொடர்மொழிகளில் வரு

மொழி விதிமுதலா யிருக்குமே யன்றி, யாண்டும் தனிமொழி யில் இயல்பு முதலாய் வருவதன்று. அங்ஙனம், இங்ஙனம் என்பன அவ்விதம் இவ்விதம் என்று பொருள்படுவனவாகும். அவ்வண்ணம், அவ்வகை, அவ்விதம், அப்படி என்னும் தொடர்மொழிகளிலுள்ள வண்ணம், வகை, விதம், படி என்னும் சொற்கள் தனித்து வழங்குவதுபோல, ஙனம் என்னும் சொல் தனித்து வழங்குவதன்று. அவன் செய்த விதம், அவன் செய்த ஙனம் என்னுந் தொடர்களைக் கூறிக் காண்க.

அங்ஙனம், இங்ஙனம் முதலிய தொடர்மொழிகளில் மெல்லோசை சிறந்திருத்தலின், மெலித்தல் (Nasalization) ஓசை மிகுதியும் பயில்கின்ற மலையாள வழக்கில் ஒருகால் ஙனம் என்னும் சொல் தனித்து வழங்கலாமென்று கருதிப் பலவிடத்துமுள்ள மலையாளரைக் கேட்டதில் அவர்களும் ஙனம் என்னும் சொல் தமிழிற்போலவே மலையாளத்திலும் தொடர்மொழிப் பகுதியாய் வழங்குவதன்றித் தனித்து வழங்குவதன்று என ஒருபடித்தாய்ப் பகர்ந்து விட்டனர்.

அங்ஙனம், இங்ஙனம் என்னும் சொற்றொடர்கள் பண்டைக் காலத்தில் அங்கனம், இங்கனம் என வழங்கியுள்ளமை சங்கநூல்களா லறியப்படும். இக்காலத்திலும் சிலர் அங்கனம், இங்கனம் என்றே கூறுவதை உலகவழக்கிற் காணலாம்.

சீவக சிந்தாமணி, விமலையாரிலம்பகம் 54-ம் செய்யுளில்,

'ஈங்கனம் கனையிருளெல்லை நீந்தினன்' என்னும் ஈற்றடியிலும்,

புறநானூறு 208-ம் செய்யுளில்,

'ஈங்கனஞ் செல்க தானெனன என்னை', என்னும் அடியிலும், ஈங்கனம் என்ற வடிவம் வந்துள்ளது.

இங்கனம் எனினும் ஈங்கனம் எனினும் ஒன்றே. சுட்டும் வினவும் நீள்வது இருவகை வழக்கினும் பெரும்பான்மை. அல்லது சுட்டுவினாப் பொருண்மையில் ஒரு குறிலும் அதன் நெடிலும் ஒரெழுத்தேயெனக் கொள்ளினும் அமையும். இனி, அங்கனம், இங்கனம் என்பவற்றின் முதல் வடிவுதான் யாதோவெனிற் கூறுதும்.

கண் என்னும் இடப்பெயர் சுட்டு வினாவொடு புணர்ந்து, அக்கண், இக்கண், எக்கண் என நிற்கும். பின்பு மெலித்தன் முறையால் அங்கண், இங்கண், எங்கண் எனத் திரியும்.

(உ-ம்.) 'கடுந்தேர் குழித்தஞெள்ளல் ஆங்கண்.'
(புறம். 15.)

அங்கண் எனினும் ஆங்கண் எனினும் ஒன்றே. முன்னதன் நீட்சி பின்னதெனினும் ஒக்கும். இங்ஙனமே பிறவும்.

அங்கண், இங்கண், என்பன அங்கன், இங்கன் என மருவி மீண்டும் அங்ஙன், இங்ஙன் என மெலியும்.

(உ-ம்.) 'தீர்த்தத் துறைபடிவே னென்றவனைப் பேர்த்திங்ஙன்'
(சிலப்பதிகாரம், கனாத்திறமுரைத்தகாதை, 28-ம் அடி)

தமிழ்ச் சொற்கள் பல இன்னோசை பற்றி அம்மீறு பெறுதல் பெரும்பான்மை. (இவ்வியல்பை லத்தீன் மொழியிலும் காணலாம்.)

(உ-ம்.) தூண்—தூணம், கால்—காலம், புறவு—புறவம், குன்று—குன்றம், நெஞ்சு—நெஞ்சம், கண்டு—கண்டம்.

இங்ஙனமே அங்ஙன், இங்ஙன் முதலிய மரூஉச் சொற்றொடர்களும் அம்மீறு பெற்று அங்ஙனம், இங்ஙனம் என வழங்கும்.

ஓரிடம் மற்றோரிடத்திற்கு வழியாயிருத்தல் பற்றி பொதுவாய் இடப்பெயர்கள் ஒரு வினை செய்யும் வழியை (அதாவது வகையைக்) குறிப்பதுண்டு.

(உ-ம்.) ஆங்கு=அது போல, அப்படி.
அவ்வழி=அப்படி.

இவ்வியைபினால் வகைப்பெயர்கள் தடுமாறி இடத்தைக் குறிப்பதுமுண்டு.

(உ-ம்.) இப்படிப்போ=இவ்வழியாய்ப் போ.

அங்ஙனம், இங்ஙனம் முதலிய பெயர்களும் சொற்படி முதலில் இடத்தைக் குறித்தனவேனும், பின்பு இடம்—வழி—வகை என்னும் இயைபுபற்றி ஆகுபெயர்த் தன்மையில் வகை, விதம் என்னும் பொருள் தருவவாயின.

இனி, அங்ஙனம், இங்ஙனம் முதலிய சொற்றொடர்த் திரிபுகள் அம்மட்டிலமையாது அன்னணம், இன்னணம் முதலிய திரிபுங்கொள்ளும். நன்னூலாரே,

'இன்னதின் னுழியின்னண மியலும்' எனத் தம் உரியியற் புறனடையிற் கூறியுள்ளார். ஆதலின்,

'சுட்டியா வெகர வினுவழி யவ்வை
ஒட்டி ஙவ்வு முதலாகும்மே'      எனச் சூத்திரித்தவர்

'சுட்டியா வெகர வினுவழி யவ்வை
ஒட்டி னவ்வு முதலாகும்மே' எனச் சூத்தரியாதொழிந்தது குன்றக் கூறலாமன்றே? ஆதலான், தொல்காப்பியர்க்கு முற்காலத் தமிழிலன்றிப் பிற்காலத் தமிழில் ஙம்முதலேயில்லையென்று தெள்ளிதிற் றெளிக.

---

# இணைப்புச்சொல் அழகு

[வேலணைகிழார். க. வேந்தனர்.]

## I

1. வேந்தன் மெலிவதேன்
   மேலாய தனிச்சமேன் } மெல்லியலையிட்டு.
2. அரிவையர் ஆடுவதும்
   அரனர் ஆடுவதும் } அம்மானையிட்டு.
3. வள்ளி யஞ்சியது
   மாயன் கெஞ்சியதும் } ஆனைக்கே.

## II

### மலைபு வினுக்கள்

1. மயில் வினையின் தலை நீக்கிக் குயில் வினையின் தலையை ஆங்குப் புணர்த்தின் என்ன ஆகும்?

(மயில்வினை—ஆடல்; குயில்வினை—கூவல்; (கூ + டல்) கூடல் ஆகும்)

2. அறத்தின் முதலும் மறத்தின் முடிவுஞ் சேர என்னும்?

(அ + ம்) அழகுஆகும்.

---

589




## சிவஞான போதக் கருத்து

### ஆறுவது சூத்திரம்

[திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள்]

பதிப்புரிமை ஆக்கியோற் குரியது.

(சிலம்பு 14-பரல் 11: பக்கம் ௫௨௫ தொடர்ச்சி.)

13. பதியினுடைய சிறப்பிலக்கணத்தை அறிதற்குப் பதிஞானம் வேண்டப்படுதல் போல, பசுவின் சிறப்பிலக்கணத்தையும் பாசத்தின் சிறப்பிலக்கணத்தையும் அறிதற்கும் பதிஞானம் வேண்டப்படும். பசுபாச ஞானங்கள் பசுபாசங்களின் பொதுவியல்புகளை மாத்திரம் அறியுமே அன்றி அவற்றின் சிறப்பியல்புகளை அறியமாட்டா. இயல்பு, இலக்கணம் இரண்டும் ஒருபொருட் சொற்கள்.

14. சத்து என்னும் இலக்கணம் பதிபசுபாச முப்பொருள்களுக்கும் பொதுவாதலின் பாசத்தின் இலக்கணம் 'சடசத்து' என்றும், பாசத்தினின்றும் பிரித்துப் பதியினுடைய இலக்கணம் 'சித்துச் சத்து' என்றும், பசு தனித்து நிற்கும் நிலையுடையதாயிராமல் அசத்தைச் சாரும்பொழுது அசத்தாயும் சத்தைச் சாரும்பொழுது சத்தாயும் அறியப்படுதலால் பசுவினிலக்கணம் 'சிற்சடசத்து' என்றும் கூறப்படும். சித்து என்ற இலக்கணம் பசுவுக்கும் பதிக்கும் பொதுவாயினும், பசு பதியைச் சார்ந்து பதியா லறிவிக்கப்படுஞ் சித்தாதலினாலும், பதி ஒருவரா லறிவிக்கப்படாது தானே தனித்து நின்றறியுஞ் சித்தாதலினாலும் சித்தாதலாகிய இலக்கணம் பதிக்குச் செல்லுதல் போல பசுவுக்குச் செல்லாது. எவ்வாற்றாலும் சித்தாதலாகிய இலக்கணம் பதிக்கே சிறப்பாக உரியது. ஆநந்தமாகிய இலக்கணம் பதிக்கே தனியாக உரியது. பசுவாகிய உயிர் பதியாகிய சிவத்தைச் சார்ந்து ஆநந்தத்தை அநுபவித்தற்கு மாத்திரம் உரிமை உடையது. ஆகவே எவ்வாற்றானும் சத்தாதலாகிய இலக்கணமும் எவ்வாற்றானும் சித்தாதலாகிய இலக்கணமும் பதிக்கே சிறப்பாக உரியவென அறிக.

15. சத்தினிலக்கணத்தையும் அசத்தி னிலக்கணத்தையும் ஆசிரியர் கூறக் கேட்ட மாணவர்கள், தங்களுள்ளத்தில் ஓர் ஐயப்பா டுடையவர்களாய் ஆசிரியரை அடியில் வருமாறு கேட்கின்றார்கள்: "சற்காரிய வாதங் கூறும் சைவசித்தாந்தத்தில், பதி பசு பாசம் முப்பொருள்களு மென்று மழிவில்லாத அநாதி நித்திய சத்துப் பொருளே என்னும் உண்மையை நீர் முந்திய சூத்திரங்களிற் கூறியுள்ளீர். நீர் இப்பொழுது, அதற்கு முரணாகக் காரிய உலகமானது இந்திரசாலம் போலவும், கனாக்காட்சி போலவும், பேய்த்தேர் போலவும் தோன்றி மறைந்து அழிவெய்தும் என்று சொல்லுகின்றீர். இது உண்மைக்கு எவ்வாறு பொருந்தும்? என்று எங்களுள்ளத்தில் ஐயம் நிகழ்கின்றது. அடிகள் இந்த ஐயத்தை நீக்கி நாங்கள் உண்மையைத் தெளிவாய் அறியுமாறு செய்தல் வேண்டும்."

16. மாணவர்களுடைய ஐய உரையைக் கேட்ட ஆசிரியர் கூறுகின்றார்: மாணவர்களே, நீங்கள் நினைப்பதுபோல சத்தும் அசத்தும் ஒன்றுக்கொன்று மறுதலை (Opposition) உடையனவல்ல. அசத்தானது சத்தினின்றும் வேறல்ல. ஒரு பொருளே சூக்குமமான சத்திரூபமாய் விளங்கும் பொழுது சத்து என்றும், தூலமாய் விளங்கிக் காட்சிப் புலனாகும்பொழுது அசத்து என்றுங் கூறப்படுகின்றது. காட்சிப் புலனுக்கு விளங்கித் தோன்றுந் தன்மை (patent condition) யுடைய அசத்து அவ்வாறு விளங்கித் தோன்றாத (latent) சூக்குமமாய் சத்தில் அடங்கியுள்ளது அன்றி அசத்து சத்தினின்றும் வேறல்ல என்ற உண்மையை நீங்கள் நன்கு அறிதல் வேண்டும். ஒரு பொருளுக்கு விளங்கித் தோன்றாமையும் விளங்கித் தோன்றுதலும் என்ற வேறுபாடுகள் மாத்திரையேபற்றி, அதற்கு முறையே சத்துத் தன்மையும் அசத்துத் தன்மையும் கூறப்படுகின்றன. நீங்கள் நினைப்பதுபோல அப்பொருள் இல்லை உண்டு என்பது பற்றி சத்துத்தன்மையும் அசத்துத் தன்மையுங் கூறப்படுவனவல்ல. தார்க்கிகர் கூறுகிற எழு பதார்த்தங்களி லொன்றாகிய அபாவம் (இன்மை) சைவ சித்தாந்தத்திலில்லை. தார்க்கிகர் யாதாமொரு பொருள் நமக்குப் புலனாகாததற்கு அப்பொருளில்லாமையே காரணமென்பர். சைவ சித்தாந்திகள் அப்பொருள் தூலமாய் விளங்கித் தோன்றாது சூக்கும வடிவில் புலனாகா திருத்தலே அஃது இல்லாதிருப்பதற்குக் காரணமென்பர். உலகந் தோன்றி அழிவெய்தும் என்றதனல் உலகம் ஒன்றுமில்லாமற் கெட்டொழியும் என்பது பொருளன்று; தோற்றம் என்பது சூக்கும நிலையிலிருந்து தூல நிலைக்கு மாறுதலையும், அழிவு என்பது

தூல நிலையிலிருந்து சூக்கும நிலைக்கு மாறுதலையும் குறிக்கும். சைவசித்தாந்தங் கூறுஞ் சற்காரிய வாதமுறைப்படி உள்ள தாகிய பொருள் எப்பொழுதும் அழிவதில்லை (nothing is lost), இல்லாத பொருள் தோன்றுவதுமில்லை. நாம் மேலே காரிய உலகமழிவெய்தும் என்று சொன்னதை இந்தப்பொரு ளில் வைத்து அறிதல் வேண்டும். சத்து அசத்து என்பன வடமொழிச் சொற்கள். தமிழ் மொழியில் சத்து என்பது உண்மை, மெய், வாய்மை என்ற சொற்களாலும் அசத்து என்பது பொய், வஞ்சனை, மாயம், கள்ளம் என்ற சொற்களா லும் குறிக்கப்படுகின்றன. "மெய்யராகிப் பொய்மைநீக்கி" என்று (50-4) சம்பந்தரும், "மெய்ம்மையா முழவைச் செய்து பொய்ம்மையாங் களையை வாங்கி" என்று (76-2) நாவுக்கரச ரும், "மெய்யனை மெய்யிலாதவர் தங்களுக்கெல்லாம் பொய் யனை" என்று (57-11) சுந்தரரும், "பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே" என்று திருவாசகம் சிவபுராண அகவலிலும், "பொய் யுடையார்க்கு அரன் போலகலும் அகன்றூற் புணரின், மெய்யு டையார்க்கவ னம்பலம்போல மிக நணுகும்" என்று திருக் கோவையாரிலும் மாணிக்கவாசகரும் கூறுதல் காண்க. இச் சொற்க ளிவ்வாறே பிற தமிழ்மறை நூல்களிலும் வழங்கப் படுகின்றன.

17. மேலே கூறப்பட்டவாறு உலகம் தூலமாய் விளங் கித் தோன்றும் நிலையில் அசத்து என்று கூறப்படுதல் போல், ஏனைய ஆணவமலம் மாயை வினை ஆகிய பாசப்பொருள்களும் கூறப்படுகின்றன. ஆணவமலமானது தனது சத்தி உயிர் களுடைய கட்டுக் காலத்தில் விளங்கி மேம்பட்டு, உயிர்கள் வீடு பேறடையுங் காலத்தில் ஒளி முன் இருள்போல மடங்கிச் சூனியம்போற் கிடக்கும் வேறுபாடு மாத்திரையே பற்றி அசத்து என்று கூறப்படும்; அவ்வாறே ஆணவமலத்துக்குத் துணைவர்களாகிய மாயை வினைகளும் காரணவத்தையில் சூக்கு மமாய் நின்றும் காரியாவத்தையில் தத்தமியல்பி னிங்கித் தூலமாய் விளங்கி நின்று உயிர்களைப் பந்தமுறுத்தும் வேறு பாடு மாத்திரையே பற்றி அசத்து என்று கூறப்படும். பாசங் கள் அசத்தாதலாகிய இலக்கண முடையனவாதற்குக் காரணம் அவற்றுடன் அருள் விளங்குதல் பற்றி மலம் விளங்கித் தோன் றுமையே யாகும். உயிரினது தவமுயற்சியால் அதனுடன் சேர்ந்துள்ள பாசங்களுடன் எம்மட்டும் அருள் விரவி விளங் கித் தோன்றுமோ, அம்மட்டும் பாசங்கள் தத்தஞ் சத்தி மடங்கி அசத்துத் தன்மையுடையனவாகும்.

18. உயிரானது கேவல நிலையில் தனக்குரிமை யில்லாத மலத்தின் மறைப்புண்டு தனது இச்சா ஞானக்கிரியா சத்திகள் மடங்கிச் சூனியம்போற் கிடத்தல் பற்றி அசத்து ஆதற்கும், வீடுபேற்று நிலையில் தனது இச்சா ஞானக் கிரியா சத்திகள் முழுவதும் விளங்கிப் பேரின்ப மடைதற்கு உரிமையுடையதாய் மீள மனத்தின் மறைப்புண்ணுதலின்றி என்று மொரு தன்மைத்தான நிலை அடைந்திருத்தல் பற்றிச் சத்து ஆதற்கும் பொதுவாய் நிற்றலின் சதசத்து எனப்படும். உயிரானது அசத்தாதலாகிய இலக்கண முடையதாதற்கு மலம் அதனுடன் விரவி நிற்றலும், சத்தாதலாகிய இலக்கணமுடையதாதற்கு அதனிடம் அருள் விளங்குதல் பற்றி மலம் விரவாது நிற்றலும் ஏதுக்களாமென அறிக. உயிரானது சத்தசத்து என்பது ஏழாஞ் சூத்திரத்தில் விளக்கிக் கூறப்படும்.

19. இயல்பாகவே பாசங்களி னீங்கிய அநாதி முத்தனாகிய முதல்வன் ஏனைய பசுபாசங்கள் போலத், தனது சத்தி என்றும் மடங்குதலின்றி ஒருதன்மையனேயாய் விளங்கி மேம்பட்டு நிற்றலால் அவனுக்கு எவ்வாற்றானும் அசத்தாதலாகிய இலக்கணம் செல்லாது. அவன் எக்காலத்தும் சத்தாதலாகிய இலக்கணத்தையே உடையவனாவன். உயிர் பொதுவகையால் சித்தாதலின்றிச் சிறப்புவகையால்மட்டும் சித்தாதலாகிய இலக்கணமுடையதுபோ லல்லாமல் முதல்வன் எவ்வாற்றானும் சித்தாதலாகிய இலக்கணமுமுடையன்: ஆதலின் அவனுக்கே சத்துச் சித்து என்ற இலக்கணம் சிறப்பாகப் பொருந்தும் என அறிக. முதல்வன் இங்ஙனம் கூறப்பட்ட சிறப்பிலக்கண முடையனாதலின் உயிர்களைப் பாசக்கட்டுகளினின்று நீக்கிப் பேரின்ப மடையச் செய்தற்கு உரிமையும் பேரறிவும் பேராற்றலு முடையவனா யிருக்கின்றான்.

20. ஆசிரியர் கூறிய அறிவுரைகளைக் கேட்ட மாணவர்கள் தங்கள் ஐயந்தீர்ந்து உண்மையைத் தெளிவாயறிந்ததாகச் சொன்னார்கள்.

21. இனிச் சத்தினிலக்கணமும் அசத்தி னிலக்கணமுங் கூறுதல் பின் ஏழாஞ் சூத்திரமுதற் கூறப்படும் உண்மை அதிகாரங் கூறுதற்குத் தோற்றுவாய் செய்தல் எங்ஙனம் என்பது கருதுவாம். தோற்றுவாய் என்பது தோன்றச் செய்யுமிடம், அதாவது பின்னே கூறப்படு மொருபொருளுக்கு முன்னே அதனைக் குறிப்பாகத் தெரிவிக்குமிடம் ஆகும். (Introduction by way of suggestion beforehand to what follows.) மேலே கூறியவாற்றால் மலமாயை வினைகள் (கன்மங்கள்)

ஆகிய பாசங்கள் சத்தினிலக்கணமுடையனவாதல், உயிர்களைப் பந்தமுறுத்தும் பொருட்டுத் தங்கள் சத்திகள் விளங்குதல் பற்றியும், உயிர்கள் சத்திலக்கண முடையனவாதல் உயிர்களிடம் முதல்வனது அருள் விளங்குதல் காரணமாக அப் பாசங்களின் சத்திகள் மடங்கிக் கிடத்தல் பற்றியும், முதல்வன் எவ்வாற்றானும் சத்தினிலக்கணமுடையவனாதல் அவன் அநாதியே பாசங்களினின்று நீங்கி யிருத்தல் பற்றியும் என்பது தெளிவாகும். ஆதலால் உயிர்கள் மலமாயை வினைகளாகிய பாசங்களின் ஆட்சியிலிருந்து நீங்குதலே அசத்துத் தன்மையிலிருந்து நீங்குதல் என்பதும், அங்ஙனம் அசத்துத் தன்மையிலிருந்து நீங்கி முதல்வனது அருளாட்சிக்கு ளடங்குதலே சத்துத்தன்மையை அடைதல் என்பதும் பெறப்படும். உண்மை அதிகாரத்தில் உயிர்கள், பாசங்களின் ஆட்சியினின்று நீங்கி முதல்வனது அருளாட்சிக்கு ளடங்கும் பொருட்டு உயிர்களால் சாதிக்கப்படுஞ் சாதனங்களும் அச் சாதனங்களின் பயனாகிய வீடுபேறுங் கூறப்படுகின்றன வாதலின், உண்மை அதிகாரத்துக்குச் சத்தசத்தி னிலக்கணங்கள் கூறும் ஆறுஞ் சூத்திரம் தோற்றுவாயாகின்றது. உயிர்கள் முதல்வனுடைய அருளாட்சிக்கு ளடங்கிநின்று வீடு பேறடைதற்கு முதல்வன் செய்யும் அருட்செயல்கள் இன்ன இன்ன என விரிவா யுண்மை அதிகாரத்திற் கூறப்படு முண்மைகளுக்கு முன்னறிவிப்பாக ஆறுஞ் சூத்திரத்தில் முதல்வன் சத்துச் சித்தாகிய சிறப்பிலக்கண முடையன் என்பது மாத்திரங் கூறப்பட்டதென்பது மறிக.

22. இச்சூத்திரம் இரண்டு அதிகரணங்களை உடையது: வழி நூலாசிரியர் சிவஞான சித்தியாரில் "பிரமப் பொருள் அநிரு வசனீயம்" என்று மாயாவாதிகள் கூறுங் கூற்றை மறுத்தற்குத் தனியே மூன்றாவது அதிகரணங் கூறுகின்றார். அந்த அதிகரணம் ஆசிரியர் கூறும் இரண்டாவது அதிகரணத்தி லடங்கும். இரண்டு அதிகரணங்களும் பின் முறையே கூறப்படும்.

# புதுக் கவிகள் - Original Poetry

## விட்டிலும் நானும்

[கீ. இ.]

(அச்சுரிமை ஆக்கியோனது)

என்னவென் றெண்ணுகின் றனையதை விட்டிலே?
இன்னலென் றறிகிலை, ஈதென விந்தையோ!
வெம்மைசூழ் அனலென, வெற்றொளிப் பிழம்பெனத்,
தம்மைவந் தணுகியார் தரிக்கொணாத் தீதென,
உற்றுநீ யோர்ந்திலை; உந்திநீ யுவப்பொடு
பற்றுதீப் பாழினில் பதைபதைத் தோடுவை;
கதுமெனக் கனலதிற் காய்ந்து நீ மாளுவை;
இதுவுநற் செயலதோ, இடர்விழைந் தோடலே?

இனியநற் கனியென, வின்பமீப் பொருளெனத்,
தனிச்சுவைப் பாகெனத், தவறி நீ நினைதியோ?
கூற்றுனக் கென்றதைக் கூர்ந்துநீ யோர்ந்திலை;
தேற்றுளங் கொண்டிலை, தெளிபொருள் ஆய்ந்திலை;
துன்பம்என் றறிகிலைத், துணையெனக் கொண்டனை
இன்பம்என் றெண்ணினை, இம்மியிற் கருகினை!

அந்தோ! என் செய்குவல்? அறிவிலா விட்டிலே!
எந்தன துள்ளமும் எவ்வமென் றோர்கிலா
துலகபற் பொருண்மிசை யூர்ந்துவூர்ந் தேகுதே!
நலமிலாப் பாழ்களை நலமென நாடுதே!
நீயுடல் கருகினை_நா னுளங் கருகுவன்;
மாயையென் றோர்கிலோம் மாய்ந்துமாய்ந் தழிகிறோம்
உன்னைநாட் கண்ணுறும் உலகினர் என் போலோர்
இன்னலாம் மண்ணதில் இச்சைபோய் வாழரோ!

# ஆராய்ச்சிப் பகுதி : Research

## சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும்

[வித்துவசிகாமணி திரு. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை]

(௫௧௯ ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நாணய உருவங்களால் இந்து மதம் உன்னத நிலையிலிருந்தது என்று நாம் அறியக்கிடக்கின்றது. நாணயத்தில் உள்ள முத்திரைகள் வழக்கமாய் அந்தந்த வம்சத்து அரசர்களின் பெயர்களாலேயே இருந்தன. கன்னடத்தில் அல்லது நாகரத்தில் வரையப்பட்டு இருந்தன. யாதொரு பாத்தியமு மில்லாத, ஆனல் பலாத்காரமாய்க் கைப்பற்றிய, மகம்மதியர்களும் உள்நாட்டுச் சிற்றரசர்களும் கைப்பற்றிய காலமே நாலாம் பிரிவுகாலம் எனலாம். இக்காலத்து நாணயங்கள் விஜயநகர் நாணயங்களைப்போல அடிக்கப்பட்டன. ஹைதர், திப்பு, நாயகர்கள், மகாராஷ்டிரர்கள், டேனிஷ் காரர்கள், உலாந்தாக்காரர்கள், போர்ச்சுக்கீசியர், பிரஞ்சுக்காரர்கள், முதலில்வந்த ஆங்கிலேயர்கள் இவர்களுடைய நாணயங்களும் இக்காலத்தில் வந்து வழங்கின.

சேதுபதிகள் குலோத்துங்க சோழன் காலத்துக்குப்பின் அதாவது 11-ம் நூற்றாண்டுவரையில் சோழர்கள்கீழ் அடிமைகளாகவே இருந்துவந்தார்கள். அவர்களுக்குக் கீழ்ப்பட்ட அடிமைகளாக இருந்தவரையில் அவர்களுடைய தலைமை அரசர்களுடைய நாணயங்களையே வழங்கிவந்தார்கள். சோழ ராஜ்யம் க்ஷீணித்தபிறகு சேதுபதிகளின் சரித்திரத்தை நோக்குகையில் மதுரைச் சரித்திரத்தைப் பெரும்பாலும் ஒத்திருக்கிறது. ஏறக்குறைய பதின்மூன்றும் நூற்றாண்டில் பாண்டிய அதிகாரம் மறுபடியும் கொஞ்சகாலம் வலுத்திருந்தது. மாலிக் காபர் என்பவன் தென்னிந்தியாவுக்கு 1314-ல் வந்தான். அவனுக்குப்பிறகு விஜயநகரத்து அரசர்கள் மதுரையை நாயகர்-கவர்னர்களைக்கொண்டு ஆண்டுவந்தார்கள். விஜயநகர வம்சத்தார் பராக்கிரமங்குறைய நாயகர்கள் சுயாதீனம் பெற்றார்கள். இலங்கேசுவரனல் தென்னடு ஜயிக்கப்பட்டபின் சேதுபதி ராஜ்யமும் சுயாதீன மடைந்தது. அவன் சேதுபதிக்குச் சுதந்திரத்தை அளித்தான். எங்கும் செலாவணியாயிருந்த ஸிலோன் நாணயங்களைப்போலவே இலங்கேசுவரனுடைய செல்வாக்கினல் சேதுபதிகளும் தங்கள் நாணயங்களை முதலில் போடத் தலைப்பட்டார்கள். ஸிலோன் நாணயங்

கள் இராஜ ராஜசோழ நாணயமாதிரியை அனுசரித்தன என்பது நாம் முன்னரே அறிந்தவிஷயம். தென்னிந்திய நாணயங்களைப் போலவே சேதுபதி நாணயங்களும் காலம் குறிக்கப்படாதன.

நாணயங்களில் பொதுவாக இரண்டு விதங்களுண்டு: அவை ஒன்று காலாகாலங்களில் வெளிப்படுவது; மற்றொன்று வழக்கமான ஒரேமாதிரியில் வழங்குவது. இவற்றில் முதல் வகை, வெளிப்படுங் காலத்தைப் பொறுத்தது. இரண்டாவது மாதிரி, நாணய முத்திரையையும் ஆக்கத்தையும் (வேலைப்பாடு) பொறுத்தது. சேதுபதி நாணயங்கள் மேற்கண்ட இருவிதமும் பொருந்தியிருந்தமையால் மனோகரமாய் இருக்கின்றன. துரைத்தன காரியங்களில் சோழ அரசர்கள் பின்னிட்டுப் போய் இலங்கையர்கள் தலையெடுத்தபிறகு நாணயங்கள் எல்லாம் இலங்கை நாணயங்களுக்கு மிகுதியும் ஒத்திருந்தன. பாண்டியர்களோடு அவர்களுடைய இந்துமதமும் முன்போலவே திரும்பி உன்னத நிலையை அடைந்தகாலத்துச் சேதுபதிகள் தேசாபிமானிகளாய்த் தங்கள் மதத்தினிடமும் தங்களுடைய முக்கியமான ராமேசுவரக் கோயிலினிடமும் அதிக அபிமானத்தைக் காட்ட ஆரம்பித்தார்கள். ஆகவே சேதுபதிகளே பிரபலமாய் வழங்கும் முத்திரைகளாய் ஆய்விட்டன, பிற்பட்டு விஜயநகர் நாயகர்கள் ஆதிக்கம் பெற்றதை யறிந்த சடையக்க வம்சத்தார் காலத்தில் மதசம்பந்தமாய் முத்திரைகள் மாறத் தலைப்பட்டன. அதாவது விஜயநகர ராஜ்யத்துக்கே உரியவைகளான வீரபாத முத்திரைகள் என்ற அனுமார் முத்திரைகளும் பத்துப்பதுமமுமே.

விஜயநகர ராஜ்யத்தின் க்ஷீணதிசைக்குப்பின் அரசாட்சியின்றி ராஜ்யம் தாறுமாறாய் இருந்தகாலம் வரையில் மேற்கண்ட நாணயங்கள் வழங்கிவந்தன. மதுரை ஜில்லா இங்கிலீஷ்காரர் கைவசமாகி, கலெக்டர் அதிகாரத்தின் கீழ்வந்தகாலம் வரையில் (1790) எங்கும் ஒரே குழப்பம். இதுவரை செலாவணியான சகல நாணயங்களும் செம்பால் அடிக்கப்பட்டவை. பொன், வெள்ளி நாணயங்கள் இருந்ததாகத் தெரியவில்லை.

திவான்பகதூர் T. M. ரெங்காச்சாரியாரும், திவான்பகதூர் தேசிகாச்சாரியாரும் நாணய விஷயமாய்த் தென்னிந்தியாவில் செய்த 25 வருஷ "நாணயவேட்டை"யில் ஒரு பொன் அல்லது வெள்ளிநாணயங்கூட அவர்களுக்குத் தென்படவில்லை. டாக்டர் ட்ரேஸியும் (Dr. Tracy) ஒன்றும் கண்டுபிடித்தாரில்லை. Captain Infrall ஒரேஒரு பொன் நாணயம் கண்டதாகக் கூறுகிறார். அது சேதுபதி நாணயமாக இருக்குமோவென்றும் ஊகிக்கிறார். சந்தேகம் அவரையும் விட்டு நீங்கின

பாடில்லை. சேதுபதிகள் பொன்நாணயங்கள் அடித்து வழங்க வில்லை என்பதற்குப் பல ருசுக்கள் உண்டு. சில்லரை லேவா தேவிகளில் செம்பு நாணயங்கள் வழங்கலாயின. பண்டமாற்ற லில், சோழராஜ்யம் போன்ற மற்ற அரசாங்கங்களில் உள்ள அதிக விலையுள்ள நாணயங்கள் இருந்துவந்தன. வெனிஷியர் நாணயம் (Sequins) ரோமர் நாணயம் (Obols) இவை போன்றவை பரிவர்த்தனைசெய்ய உபயோகப்பட்டன. இது போன்ற சந்தேகமான சந்தர்ப்பத்தில் இவ்வாறு ஊகிப் பதற்கு நமக்கு ஆதாரம் அதிகம் உள்ளது. டேனிஷ்காரர் இந்தியாவில் இருந்த நீடித்தகாலத்திலும், பொன்நாணயம் எதுவும் அடித்து வழங்கவில்லை.

வராஹன் என்னும் பொன்நாணயம் ஒன்றே 7-வது கிரிஸ்தியான் என்பவரது ஆளுகையில் சொற்பகாலம் மட்டும் அடிக்கப்பட்டு வழங்கிவந்தது. இது தவிர மற்றக் காலங்களி லெல்லாம் பரங்கிப்பேட்டை வராஹன் என்றும் எஸ்கட் (Escot) வராஹன் என்றும், நக்ஷத்திர வராஹன் என்றும், பொன் ரூபாய் என்றும் சில பொன்நாணயங்கள் தரங்கம் பாடியில் வழங்கிவந்தன. இத்தரங்கம்பாடியில் ஆற்காட்டு ரூபாய்களும் செலாவணியாய் இருந்தன. புதுக்கோட்டை சமஸ்தானத்தை இதற்கு ஓர் உதாரணமாய்க் காட்டலாம். மிகச் சொற்பவிலையுள்ள செப்புநாணயமாகிய விஜயை என்ற அம்மன் காசுமட்டும் இச்சமஸ்தானத்தார் அடித்து வழங்கின தாகத் தெரிகிறது. சேதுபதி நாணயங்களின் நிறைகள் இலங்கை மாஷாவுக்கு என்ன நிறையோ அதே நிறைதான். பின்வருபவைகளால் இது எளிதில் விளங்கும். 68 தான்யமணி நிறையில் ஒரு நாணயம். 34 தான்யமணியில் ஒரு நாணயம். 17 தான்யமணியில் ஒரு நாணயம். இப்படி மூன்றுதர நிறை உள்ள நாணயங்கள் அடிக்கப்பட்டன. நாணயங்களின் காலக் குறிப்பு விஷயமாய்ப் பேசியபோது முத்திரைகளைப்பற்றியும் முன்னமேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாணயங்களின் பின் பக்கத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் ஒரேவிதமான ஒரு சேது பதியின் உருவமுத்திரையே, ஒரு சேதுபதி காலத்தில் அடித்த நாணயமே, அவருக்குப் பின்வந்த பல சேதுபதிகளுடைய காலத்திலும் யாதொரு வேறுபாடின்றி வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைத் தெரிவிக்கின்றது.

நாணயங்களின் பெறுமானங்களைப் பற்றி ஒரு நாணயத் திலும் குறிக்கப்படவில்லை. பெரிது, சிறியது, நடுத்தரமானது என மூன்று வித பரிமாணமுள்ளவைகளாக அந்நாணயங்கள் அடிக்கப்பட்டு வந்தன. அக்காலத்தில் இந்தியாவில் வழங்

கின நாணயங்களைப் பார்த்து அவற்றைப்போலவே டேனிஷ், உலாந்தாக்கார கம்பெனியாரால் அமைக்கப்பட்ட நாணயங்களோடு ஒப்பிட்டு இந்தவிந்த நாணயங்கள் இவ்வளவு விலையுள்ளவை என்று உத்தேசமாய்ச் சொல்லக் கூடும். இந்த மூன்றுவிதப் பிரமாண நாணயங்கள் மேற்குறித்த ஐரோப்பியக் கம்பெனியாரால் ஏற்பட்ட 20 காசு, 10 காசு, 5 காசு அல்லது 4 காசு ஆகிய மூன்று வகை நாணயங்களை ஒத்திருந்தன. பின் வரும் அட்டவணையில் சேதுபதி நாணயங்களின் நிறை, விலை முதலியவை சுருக்கமாய்க் குறிக்கப்பட்டிருக்கின்றன. ஷை நாணயங்கள் முழு அளவு, அரை அளவு என இரண்டாகக் கணக்கிடப் பட்டாலும் அவற்றின் நிறைகளைக் கொண்டு மூன்று பிரிவுகளாக்கலாம்.

இவ்விந்திய தீபகற்பத்தின் தென்கோடியை ஆண்டு வந்தவர்கள் சேதுபதிகள் ஆவார்கள். அச் சேதுபதிகளின் சரித்திர சம்பந்தமாய் ஏதேனும் ஒரு விஷயத்தைத் தெளிவு படுத்துதல் தென்னிந்திய சரித்திரமாகிய கட்டிடச் சுவரின்மேல் இன்னும் ஒரு கல்லை உயர்த்தியதாகவே முடியும். நம் நாட்டுச் சரித்திர உண்மையை வெளிப்படுத்த சிற்ப சாஸ்திரத்தைப் போல் இந் நாணய ஆராய்ச்சியும் பெரிதும் பயன்படுகிறது என்பதைச் சரித்திர மாணவர்கள் மனதில் கொள்வார்கள் என நம்புகிறேன்.

சேதுபதிகள் ஆரம்பத்தில் இருந்தே வீரச்செயல்களுக்கும் தமிழ் அபிமானத்துக்கும் பேர்போனவர்கள். அவர்கள் இப்பொழுதும் தமிழ் அகத்துக்கு ஒரு ஆதார பீடம் போலத்தான் இருந்து வருகிறார்கள். இவ்விஷயத்தில் அவர்கள் பூர்வகாலத்துப் பாண்டிய அரசர்க்குரிய சகல பெருமைகளையும் பரம்பரையாய் அடைந்து வந்திருக்கிறார்கள். மத சம்பந்தமான விஷயத்தில் இவர்கள் பாண்டியர்களுக்குச் சற்றும் பின்னடைந்தவர் ஆகார். மேலும் இவர்கள் இராமபக்தர்கள். இவர்கள் சிற்றரசர்களாக இருந்தகாலத்தில் இவர்களிடம் இராஜ விசுவாசமும், அஞ்சாமையும், மன உறுதியும் அடைக்கலம் புகுந்திருந்தன எனலாம். இவர்கள் பொறுப்பு வகித்த காலத்திலும் குடிகளைப் பிதாவைப்போல் அன்புடன் ஆதரித்து வந்திருக்கிறார்கள்.

ஸ்ரீ காளத்தி நாதரிடம் திண்ணனுக்கு (கண்ணப்பன்) இருந்த தெய்வ பக்தியும், இராமனிடத்தில் குகனுக்கு இருந்த வாஞ்சையைப் போல் இவர்களுக்குக் கடவுளின் சிந்தனையும் குடிகளிடம் அன்பும் அளவுகடந்து இருந்து வந்ததை நோக்க எழும் மகிழ்ச்சிக்கோர் எல்லையே யில்லை.

---

# திராவிடக் குழுவியல்பு

[காழி. சிவ. கண்ணுசாமி அவர்கள் B. A.]

மக்கட் டொகுதியமைப்பு முறையை ஆராய்ந்து காண்போமாயின், தனிப்பட்ட வகையில் மக்கள் என்றும், நெருங்கிய உறவினராய மக்கள் பலர் ஒன்றுசேர்ந்த குடும்பம் என்றும், பலகுடும்பங்கள் சேர்ந்த கிளை யென்றும், பலகிளைகளைக் கொண்ட இனம் என்றும், பல இனங்களாலாய குழு வென்றும், பல குழுக்கள் அடங்கிய பெருங்குழு வென்றும் நிரல்பட விளங்கக் காணலாம். நடைமுறையில் சிக்கல்கள் ஏற்படாதவாறும், தெளிவு கருதியும் இவ் வகுப்பினை மக்களால் தேர்ந்து கொள்ளப்பட்ட தொன்றாகும். தொழிலொற்றுமை, உறவுமுறை, அடிமையாப்பு முதலிய பற்பல ஏதுக்களை முன்னிட்டு மக்கள் இவ்வகுப்பினையை மேற்கொண்டனர். தொழில் கருதிப் பெயர் பூண்டுள்ள பிரிவினர்களும், தம் முன்னோர்களின் பெயர்களையே சிறப்புப் பெயர்களாக அமைத்துக் கொண்ட குடும்பத்தினரும், இன்னும் இவைபோன்ற பல ஏதுக்களை முன்னிட்டுத் தனித்தனியாய்ப் பெயர் பூண்டுள்ள பற்பல குடும்பத்தினர்களும் ஒரே குலப்பெயரை யுடையரா யிருத்தல் கூடும். இக் குலத்தினரிடை வழங்குவது பெரும்பாலும் ஒரே மொழியாக இருத்தலும் கூடும். ஒரு குடும்பத்தினர் தங்குடும்பத்தினர்க்குள்ளேயே கொள்வினை கொடுப்பினை வைத்துக் கொள்ள வேண்டுமென்ற கட்டாயமில்லை; ஆனால் இயன்றவரையில் ஒரே குலத்தினுக்குள் அவ்வாறு செய்துகொள்ளல் வேண்டும். இவ்வியல்பே இந்திய நாட்டின் பண்டைப் பெருங்குடிகள் பலரிடத்துக் காணப்பட்ட தொன்றாகும்.

இனி, இத்தகைய பல இனங்களை யுட்கொண்ட திராவிடக் குழுவைப்பற்றி இத்துறையிற் சிறிது ஆராய்வாம். திராவிட இனத்தாரின் தொன்மை நலங் கெடாத நிலையைக் காண வேண்டின் [1]சோட்டாநாகபுரியிலுள்ள திராவிடக் குழுவினரைத் தான் நோக்கவேண்டும். அவர்கள் பல இனங்கள் ஒன்றுசேர்ந்த குழுவினர். ஒவ்வோரினத்தையுஞ் சேர்ந்த பல குலங்களில் ஒவ்வொன்றிற்கும் பெரும்பாலும் ஒரு செடி அல்லது விலங்கின் பெயரேதான் குலப்பெயராக விருக்கும். ஒவ்வொரு குலத்தினருக்கும், அவர்களுக் கென்று ஏற்பட்ட தனியான நாட்டாண்மைக் கழக மொன்றிருக்கும்; அக்கழகத் தலைவனாக நாட்டாண்மைக்கார னொருவனிருப்பான்; அவனுக் குதவிபுரிய ஒரு சின்ன நாட்டாண்மைக் காரனும், ஊர்ப்

1. Chota-Nagpur.

பெரிய பூசாரி யொருவனும், ஏனைச் சிறு தெய்வங்களுக்குப் பலியிட்டுப் படைப்பதற்கென வமர்த்தப்பட்ட சிறு பூசாரிகள் பலரு மிருப்பார்கள்.

இனி, [1]ஒரிஸாவிலுள்ள [2]கோண்டர்கள் திராவிடக் குழுவைச் சேர்ந்தவர்களே. நிலம் நன்கு விளைந்து பலனளிக்கவும், ஊர் மக்கள் நோய்வாய்ப் படாமலிருக்கவும் வேண்டி ஒருகாலத்தில் அவர்கள் நிலமகளுக்கு, மக்களையே வெட்டிப் பொங்கலிட்டு (நரபலி) வந்ததுண்டு. இக்கோண்டர்கள் ஐம்பது [3]"கொச்சி" அல்லது குலத்தவர்கள். ஒவ்வொரு "கொச்சி" யும் ஒரு [4]முற்றம் அல்லது சிற்றூரின் பெயரைக் கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு குலத்தவரும் தாங்க ளெல்லோரும் ஒரே மூதாதையின் வழிவந்தவர்களென்று கூறிக் கொள்வார்கள்; இயன்றவரையில் தத்தங் குலப்பெயருடைய சிற்றூரிலேயே இருந்து வாழ்ந்து வருவார்கள்.

நாகமலைகளில் வசிக்கும் [6]மங்கோலாய்ட் இனத்தவர்களும் கோண்டர்களைப் போன்றே பல குலங்களைக் கொண்டவர்கள். அவர்கள் மொழியிற் குலப்பிரி வொவ்வொன்றிற்கும் [7]"கேள்" என்று பெயர். ஒவ்வொரு "கேளைச்" சேர்ந்த மக்களெல்லோரும் ஒன்றுபட ஒரே ஊரில் வாழ்ந்து வருவார்கள். ஆனால், இவர்களுடைய சிறப்பியல்பொன்றென்ன வென்றால் தஞ்சிற்றூரைச் சேர்ந்த தங்கள் குலத்தவர்களை யொழிந்த ஏனை ஊர்களைச் சேர்ந்த பிறகுலத்தினர்கள் எல்லோருமே தங்கள் பகைவர்கள் என்று கருதுவதேயாம். ஆகவே, தங்கள் சிற்றூரைச் சுற்றி அகழ்போன்ற பள்ளம் ஒன்றைத் தோண்டிக் கொள்வார்கள்; அப்பள்ளம் நிறைய கூர்மை பொருந்திய மூங்கில் முளைகளை அடித்து வைப்பார்கள்; அப்பள்ளத்தைத் தாண்டி தாங்கள் உள்ளே செல்லுவதற்கும் வெளியே வருவதற்கும் பயன்படுமாறு நூலேணி போன்ற ஒன்றை வைத்திருப்பார்கள். மகளிரைச் சிறையெடுப்பது கருதி இக்கேளினருக்குள் ஒருவருக் கொருவரிடையே அடிக்கடி படையெடுப்பும் கலாமும் நிகழ்வதுண்டு.

இனி, [8]துருக்க ஐரானியர்களென்ற இனத்தாரிடையே இரண்டு தனிப்பட்ட பிரிவுகள் உள. உறவின் முறையை அடிப்படையாகக் கொண்டு ஒன்று சேர்ந்த தொகுதி முதற்

---

1. Orissa. 2. Khonds. 3. "Gochi" 4. Muta. 5. Naga Hills. 6. Mongoloid. 7. Khel. 8. Turk-Iranians.

பிரிவாகும். [1]ஆப்கானிஸ்தானத்திலுள்ள [2]பதான்ஸ் என்ற பட்டாணிகள் இம்முறைபற்றி ஓரினமாகப் பிரிக்கப் பட்டவர்களே; [3]பஷ்டு என்ற மொழியை அவர்கள் பேசுவதாலேயே "பதான்ஸ்" என்றழைக்கப்பட்டனர் போலும். மற்றொரு பிரிவோ, உறவின் முறையினர் என்ற கட்டுப்பாடின்றி[4] வழிவழி நட்புப் பூண்டவர்கள் என்ற முறைபற்றி ஒன்று சேர்ந்த பல குலத்தினரைக் கொண்டதாகும். [5] வேளாக் மாறி என்ற ஒரு பகுப்பினரை இதற்குக் காட்டாக வெடுத்துக் கூறலாம். [6]வராகியர், பஞ்சாப் பகுதியைச் சேர்ந்த வேளாகர், ஆப்கானிஸ்தானத்தைச் சேர்ந்த வேளாகர், [7]கேத்திரர்கள், ஆப்கானியர், [8]ஜாட்டர் முதலிய பல்வேறு குலத்தவர்கள் இப்பிரிவினுள் இடம் பெற்றவர்களே. இவர்கள் மத்திய ஆசியாப் பகுதியைச் சேர்ந்தவர்களென்று கருதப்படுபவர்கள்.

இனி, வராகியர், வேளாகர் என்ற இருபிரிவினர்களும் தாய்வழி முறையே சிறந்தவழி முறையென்று கருதிச் சிறப்பிக்கும் கொள்கையர்கள்; ஆகவே, பெண்மக்களுக்கு ஏற்றங் கூறுபவர்கள். ஆப்கானியரோ, தாயினுஞ் சிறந்தது தந்தைவழி முறையென்று கருதுபவர்கள்; அதனால் பெண்மக்களை விலைபடுபொருள் எனக்கருதி நடத்தி வருபவர்கள்; பெண்களைப் பொருள் கருதி அடிமைகளாக விற்பவர்கள்.

---

1. Afghanistan. 2. Pathans. 3. Pashtu. 4. Blood-feud. 5. The Marri of Baloch. 6. Brahui. 7. Khetrans. 8. Jats.

602

## வரலாற்றுப்பகுதி: History & Biography

# தெலுங்கு மொழிப்புலவர் பெருமக்கள்

## ஆந்திர அரசகவிகள்

[கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்]

### பிரதாபருத்திரன் I

நைசாம் இராச்சியத்திலுள்ள "வாரங்கல்" என்னும் நகரத்தை இராசமாநகரமாகக்கொண்டு அரசு செய்த "காகதீய கணபதி" அரசர்கள், ஆந்திர அரசியல் வரலாற்றில் இடம்பெற்றுக் கீர்த்தியுடன் விளங்கிய நல்லோராவர். இவ்வரசருள், 'பிரதாபருத்திரன்' என்று பெயர் புனைந்தவர் இருவரென ஆராய்ச்சியால் அறியப்படுகிறது. 'முதலாம் பிரதாபருத்திரன்' கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் புகழ்பெருக விளங்கியிருந்தனன். இவ் வரசன் "ஒட்ரம்" என்னும் நாட்டை, கி. பி. 1504-ஆம் ஆண்டுமுதல் 1552-ஆம் ஆண்டுவரை அரசு புரிந்து பெருஞ் சிறப்புடன் திகழ்ந்தனன். "புருடோத்தமதேவன்" என்னும் காகதீய அரசனுக்குப்பின், அரசு கைக்கொண்டு அரியாசனத்தில் அமர்ந்தவன் இவ்வரசனே யாவன். இம்மன்னன், முற்றக்கற்ற பாவலர்—நாவலர்களைப் பெரிதும் பாராட்டிப் போற்றிக் காத்துவந்ததோடு தானும் வடமொழி, கன்னடம், களிதெலுங்கு, முதலிய நாட்டுமொழிகளைப் பெரிதும் பயின்று, அவைகளில் பேரறிவும், புலமையும் பெற்று "வித்தியாபூஷணம்" என்ற விருதுப் பெயரையும் அடைந்து புகழ் சிறந்திருந்தனன். நன்னய சோழகவியைப் போலவே இம் முதலாம் பிரதாபருத்திரனும் சைவ சீலனாகத் திகழ்ந்தனன். இரப்போர் இன்முகம்நோக்கி ஈவதில்.விருப்பமிக்க இவன், 'பால்குருகி சோமநாதன்' முதலான சைவ கவிகளுக்கு முற்றூட்டாக அக்கிரகாரங்கள், விளைநிலங்கள் முதலியவற்றை நன்கொடையாக அளித்தான். நாட்டுமொழிகளில் இவ்வரசன் புலமை வல்லானென்பதற்கு, வடமொழியில் நீதிகளுக்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும் "நீதிசாரம்" எனப் பெயரியதொரு நூலைத் தெலுங்குமொழியில் அழகுபெற வியற்றி ஆந்திர உலகத்துக்கு உதவியதே ஓர் சான்றும். இந்நூலின் அருமை பெருமைகளை ஆய்ந்தறிந்த

ஆந்திரமொழி வரலாற்று ஆசிரியர்கள், இவ் உருத்திரனின் புலமை அறிவினைப் பெருமைபடப் பாராட்டி அந்நூலுள் சிறப்பித்து வரைந்திருக்கின்றனர். நீதிசாத்திர நூலாசிரியர் களுள், இம் முதலாம் பிரதாபருத்திர அரசனே இராஜகவி யென்றும், முதல்வைத் தெண்ணற்குரிய சிறப்புடையனென் றும், இவைகொண்டே இவ்வரசனுக்குக் "சிரேட்டர்" என்ற விருதுப்பெயரும் ஆந்திரவுலகில் வழங்கப் பெற்றதென்றும் அறிஞர்கள் கூறுகின்றனர். இப் பிரதாபருத்திரனது நீதி சாரத்தைப் பின்பற்றியே தெலுங்கு மொழிப்புலவர் பலர் நீதிநூல்களை இயற்றத் தொடங்கினர். இதனால், இவரது நீதி சாத்திரப்புலமை எவ்வளவு மேம்பாடுடைய தென்று புலனு கின்றது. இவ்வரசனது காலம் கி. பி. 1162-ஆம் ஆண்டுக்குச் சிறிது முன்னும், கி. பி. 1197 ஆண்டுக்குச் சிறிது பின்னும் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவ் வுருத்திரனது பெயரிட்ட சாசனங்கள் கோதாவரி ஜில்லா திராக்ஷராமா என்ற ஊரில் கி பி. 1179-ஆம் ஆண்டில் அமைந்தது ஒன்றும்; (Sewell's List of Antiquities Madras, vol I, P. 31) கிருஷ்ணு சில்லா குங்குலகோண்டா என்ற ஊரில் கி. பி. 1197-ஆம் ஆண் டில் அமைந்தது ஒன்றும்; (Do. Do. P. 71) 1162-ஆம் ஆண் டில் அமைந்தது மற்றொன்றும் (Do. vol. II P 173) காணப் படுகின்றன. இவ்வரசனைத் "திரிபுவனமல்லன்"; கணபதி அரசன் பேரன்; புரோலிராஜன், மப்பம்மதேவி அவர்கள் அருமை மகன் என்றுங் கூறுப. இவ்வரசனது பேரவையில் தான், கல்வியிற் பெரிய கம்பநாடர், சோழனுடன் கோபித்துக் கொண்டு சென்று தங்கியிருந்தது. இவ்வுண்மை, "கம்பர் பிரதாபருத்திரனிடத்துப்போய் அவன் அடைப்பை கட்டிவரப் பாடிய வெண்பா" என்று தமிழ் நாவலர் சரிதையில் காணப் படுவதால் உறுதி பெறுகின்றது. அவ்வெண்பா:—

"அவனிமுழு துண்டு மயிரா வதத்துன்
பவனி தொழுவார் படுத்தும்—புவனி
யுருத்திரா வுன்னுடைய வோரங்க ளுட்டிற்
குருத்திரா வாழைக் குழாம்"

என்பது. அவனியிலுள்ளார் அனைவரும் போந்து உண்பதா லும், அயிராவதம் போன்ற யானைமேல் நீ உலாவரும்போது நின்னைத்தொழும் பருவமாதர்கள் காமவெப்பம் ஆற்றாமற் குளிர்ச்சி எய்தல் வேண்டிப் பரப்பிப் படுப்பதாலும், வாழைக் குழாங்கள் குருத்திரா வாயின என்க; உலகம் அனைத்தும் கூடி உண்டலால் இலைபற்றாமல் குருத்தையும் அறுத்துப் பரப்ப வேண்டிற்று என்பது இதன் திரண்ட பொருள். கல்விப்

பெருமானாகிய கம்பர் இவ்வுருத்திரனால், புலமைபற்றிப் பேரன்பு பாராட்டப் பெற்றதனாலும்; கம்பருக்கு ஆந்திரருடன் நன்கு பயிலுதற் கேற்ற தெலுங்கு மொழியுணர்ச்சி யுண்டென்று உணரப் படுவதனாலும்; இவர் பாடிய கம்பராமாயணத்து 'தம்மி' (தாமரை) 'அக்கட' (அங்கு) 'அந்து' (அங்கு) என்ற சில தெலுங்கு மொழிகள் சிறுபான்மை ஆங்காங்குப் பயின்றிருத்தல் உணரப்படுவதனாலும், இக்கருத்து வலியுறுதலாகும்.

## பிரதாபருத்திரன் II

இனி, இரண்டாம் பிரதாபருத்திரனைப்பற்றி ஆராய்வாம். இவன் ஓரங்கல் நாட்டு வீரபத்தினியும், பேரரசியும், பெண்கள் நாயகமுமாக விளங்கிய இராணி ருத்திரம்ம தேவியின் திருப்பேரனாவன். இவ்வரசன் கி. பி. 1295-ஆம் ஆண்டு ஓரங்கலில் சாம்ராஜ்ய பட்டாபிடேகம் செய்துகொண்டு காகதீயரின் அரியாசனத்தை அலங்கரித்தான். இவனது இனிய வரலாற்றை அறியாத ஆந்திரனே தெலுங்கு நாட்டில் இரான். பேரரசும், பேராண்மையும், பெரும்புலமையும் வல்ல இப் பிரதாபருத்திரனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு தெலுங்கு மொழியில் 'பிரதாபருத்ரீயம்' என்ற இனியதொரு நூலை ஸ்ரீ வேதம் வேங்கடராய சாஸ்திரி யென்பார் இயற்றியுள்ளனர். இதற்குச் சில ஆண்டுகளுக்கு இப்பால், டோக்ளாக் வமிசத்தின் முதல்வனான "மகமது டோக்ளாக்" என்பவன் ஓரங்கலின் மீது படையெடுத்து வந்து பிரதாபருத்திரனை யெதிர்த்தான். மூன்று முறையும் அவன் தோல்வியே அடைந்து, நான்காம் முறை, மும்முறையினும் திரட்டிய படைகளினும் பன்மடங்கு பெருகிய படைகளுடனும், போரில் அநுபவம் பெற்ற சேனாதிபதிகளுடனும் வந்து பெரும் போரிட்டான். மும்முறை செய்த போர்களில் படைகள் பெருஞ்சேதமடைந்திருந்ததனாலும், அஞ்சா நெஞ்சு கொண்டிருந்த படைத்தலைவர் பலர் வீரசொர்க்கம் சென்றிருந்ததனாலும், பிரதாபருத்திரன் அவர்களது படைகளுக்காற்றாது தோல்வியுற்றான். அப்பெரு வீரனை அப்போர்க்களத்திலேயே சிறைசெய்து டில்லிக்குக் கொண்டு சென்றனர். அதனை யுணர்ந்த மாபெருங்கவியும், பாரகாவிய மதுரவாக்கியும், புலவர் சிரேட்டருமாகிய 'வித்தியாநாதன்' என்னும் கவிப் பெருமான், வடமொழியில் அலங்காரங்கள் நிரம்பிய "பிரதாபருத்ரீயம்" என்றதொரு அரிய நூலை இயற்றிக்கொண்டு டில்லி சென்று, மகம்மதிய சக்கரவர்த்தியைக் கண்டு தமது கருத்தை அறிவித்து அநுமதி பெற்று இரண்டாம் பிரதாப

ருத்திரனைச் சிறைக் கோட்டத்தில் தரிசித்து வணங்கி, தமது காவியத்தை அம் மன்னபிரான் திருச்செவி களிப்பப் பிரசங்கித்தனர். அவிச்சுவை யன்றிப் பிறசுவை யறியா அரசர்களைப்போலின்றிப் பிரதாப ருத்திரன் கவிச்சுவை யறியும் கவிதிலகனாக விருந்ததனால், கவிப்பெருமான் சமைத்துக் கொணர்ந்த காவியச்சுவை யமுதைத் தனது செவியாரப்பருகிக் களிப்பெனும் கடலில் ஆழ்ந்திப் புலவர் பெருமானைப் பாராட்டி வழிவிடுத்தனன் என்று வரலாறு கூறுகிறது. இதனால், இரண்டாம் பிரதாபருத்திரன் நூலறிவும், நூலிலுள்ள நுட்பங்களை நுனித்தறியும் புலமை யாற்றலும் பெற்றிருந்தானென்று பெறப்படுகிறது.

இப்பேரரசன் காலத்தில்தான் "பிரதாபருத்திராப்தம்" என்ற புதியதோர் ஆண்டும் ஆந்திர நாட்டில் வழங்கப்பட்டு வந்ததென்ப. அவ்வாண்டின் காலம் இற்றைக்கு 648 ஆகின்றது.

## ஸ்ரீ கிருஷ்ணதேவராயர்

தென்னாடனைத்தும் பேரரசுபுரிந்த சக்கரவர்த்திகள் யாவரினும் மிகவும் புகழும், மேன்மையும் வாய்ந்தவர், ஸ்ரீ கிருஷ்ணதேவராயர். இப்பேரரசர் கி. பி. 1509-1525-ஆம ஆண்டில் விஜயநகரத்து அரியாசனத்தை அலங்கரித்து அணிபெற விளங்கியிருந்தனர். இவர் காலத்தில் ஆந்திர மொழி உச்ச நிலையை அடைந்திருந்தது. இவ்வரசரது பேரவையை ஆந்திரகவிகள் பலர் அலங்கரித்திருந்தனர். இக்கவிகட்கெல்லாம் கிருஷ்ணதேவராயர் தலைவராயிருந்து கவியரசரெனப் புகழ்பெற்றுத் திகழ்ந்தனர். இம்மன்னர் பெருந்தகை இயற்றிய "ஆமுக்த மாலியம்" (விஷ்ணுசித்தியம்) ஆந்திரகவி வல்லோர்கள் பலரினும், இவர் சிறந்த புலமையாளர் என்று மதிக்கச் செய்கின்றது. இவ்வுயரிய நூல், துளவமாலையணிந்த செங்கண்மாலின் திருவடிகளையே தஞ்சம் என்றடைந்து பக்திசெய்து முத்திபெறுதற்கான மூலங்களையே வற்புறுத்துகிறது. தற்கால நோக்கத்துடன் கவனித்தாலும், மாபெரும் அவ்வரசகவியிடத்தில் தமிழ்மக்கள் மிகுதியான விருப்பத்தையே கொள்வார்கள்.

பழைமையான கவிகளின் கற்பனைகளினும் மீறிய கற்பனைகள், பிரபந்த அமைப்பு, இனிய நடை, அழகிய சொல்லமைப்பு ஆகியவற்றிலும் சுதந்திரக்கற்பனை, பாவனாதிகளிலும், ஆமுக்தமாலியம் சிறந்த நூலென்றே தாராளமாகக்

கூறலாம். தெலுங்குமொழியிலுள்ள பஞ்ச காவியங்களுள் நாரிகேள பாகமான இப்பிரபந்தம் மிகவும் கடினமானதெனினும், பிரபந்தநடை, கோட்பாடு முதலியவற்றை ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் பொருந்தும்படி செய்திருப்பது போற்றத்தக்கது.

இன்னொரு முக்கிய விஷயம் யாதெனின், சக்கராதிபத்தியத்தைக் கைக்கொண்டு, செங்கோலேந்தி அரியாசனத்தமர்ந்து மேன்மையுடன் அரசு செய்யும் இப்பேரரசன், தமது நூலில் ஏழை, விவசாயி, குடிசைவாழ்க்கை யுடையவன், ஆகியவர்களின் வாழ்க்கைகள், பழக்கவழக்கங்கள், எண்ணங்கள், வேடங்கள், அவர்கள் பேசும் சொற்கள் முதலியவைகளை ஒரு சிறிதும் விடாமல் சிறப்புறக்கூட்டிச் சுயமாகத் தாம் அநுபவித்தவற்றைக் கற்போர் காமுறும்படி இயற்றியிருப்பதே. இச்செயல் பெரிதும் பாராட்டற்குரியது.

முன்னர்க் கூறிய நன்னய சோழ கவியைப் போலவே இவ்வரச கவியும் இயற்கைக் கவியே யாவர். இவருடைய காவியவருணனை அற்புதமான தன்மைவாய்ந்ததும், பேரானந்தத்தை அளிக்கவல்லதுமான சிறப்பினையுடையதுமாம்.

மேற்கூறியவாற்றால், ஸ்ரீ கிருஷ்ணதேவராயருக்கு ஆந்திரகவிகள் அனைவரினும், மேலான பதவியை அளிப்பதில் யாரும் பின்னிடாது முன்னணியிலே நிற்பர். பதினாறும் நூற்றாண்டில் ஆந்திர மொழி வரலாற்றில் சுவர்ண யுகத்துக்கு அஸ்திவாரம் போன்றவரான இப்பேரரசர் தாம் ஆந்திர-கர்னாட கீர்வாணமாதிய மொழிகளில் வித்தியாநிதியாக விளங்கியதோடு, சுவர்ணயுக காரணமான மொழி வரலாற்று சமஸ்கரணத்துக்கும் எண்ணத்தின் சுதந்தரத்துக்கும் மலைமேல் தீபம் போன்றவராயிருந்தனரென்றும் நாம் உறுதியாகக் கூறலாம்.

## மோகனாங்கி

இப்பெரிய நாரீமணி ஸ்ரீ கிருஷ்ணதேவராயருடைய திருப்புதல்வி கவிதாமணி. "மரீசிப்பிரணயம்" என்ற இனியதொரு நூலை, இப்பெண்மணி இயற்றினள். ஸ்ரீ கிருஷ்ண தேவராயர் காலத்து மொழிவளர்ச்சியை, அவளதுபெற்றோர்கள், நோக்கத்தின் சுதந்திரத்திற் கலந்து, பாஷைவரலாற்றுச் சமஸ்கரணத்தை எச்சரித்து, உயர்த்திய சமயத்தில், பாற்சங்கில் முலைப்பாலுடன், கவித்துவத்தையும் உடன்கூட்டி, இப்பெண்ணணங்கின் திருவாயில் புகட்டினரோ! எனக் கருதினும் மிகையாகாது. அக்காலத்தில் மொழி முன்னேற்றத்திற்கு அரியதும், இனியதுமான நூல்களை இயற்றிய புலவர் பெரு

மக்களுள், நல்லிசைப்புலமை வல்லா ளொருத்தியும் இருந்தா ளென்றறிவது மகிழ்வை யூட்டும் ஓர் சுபச் செய்தியாகும்.

ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் காலத்திற்குப் பிறகு ஆந்திர மொழியின் வளர்ச்சி, தளர்ச்சிபெற்றிருந்தது. கவிபாடுவோர் எண்ணிக்கையும் குறைந்து கவித்துவமும் வரவரத் தேய்பிறை யின் நிலையைப்போன்றிருந்தது. அங்ஙனம் அழிந்த நிலை யினுங்கூட காடாந்தகாரமான ஆகாயவீதியில் தாரகைத் தீபங் கள் மின்னிப் பிரகாசிப்பதுபோல் சில நூல்கள் ஆந்திர வுலகில் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அக்காலத்து விளங்கிய ஆந்திர ராஜகவிகள், மிகுதியான பெருமையைப் பெற்றிருந்ததற்குக் காரணம், மக்கள் யாவரும் மொழி வளர்ச்சியில் பெரும் பற்றும், கண்ணுங்கருத்துங் கொண் டிருந்ததேயாம்.

முற்காலக் கவிகளைப்போல், பிற்காலக்கவிகள் மதிப்பும், மாண்பும் பெருதிருந்ததற்கு இவர்கள் மொழிவளர்ச்சியில் அன்பும் முயற்சியும் கொள்ளா திருந்ததே காரணம் எனலாம். முன்னோர், மொழிவளர்ச்சி குன்றிய காலத்தும் தாய் மொழியைப் புறக்கணிக்காமல் முடிந்தளவு தொண்டு புரிந்தே வந்தனர். அதனால் அவர்கள் புகழும், பெருமையும் பெற்று விளங்கியதோடு, நம்மால் மதித்துப் பாராட்டுதற்கும் உரியராயினர்.

---

## "ஜாட்டான்"

ஒருவனை ஏளனமாகவும், பொருட்படுத்தாமலு மிகழ்ந்து கூற நேருங்கால் "அவன் கிடக்கிறான் ஜாட்டான்" என்று தமிழர்களில் ஒருசிலர் கூறக் கேட்டிருக்கலாம். ஜாட் என்பது வடவிந்தியப் பகுதியிலுள்ள ஓரினத்தாரின் குழூப் பெயராகும். அவர்கள் பெரும் பாலுந் தொழிலாளிகள்; அதிலும் இழிதகைமையனவாகக் கருதப் படும் தொழில்களை புரிந்து வயிறுவளர்ப்பவர்கள். தெருக்கடோறும் பாட்டுப் பாடிப் பிழைப்பவர்கள், தோல் தைக்கும் சக்கிலியர், கொல் லர் முதலிய தொழிலினரே இப்பிரிவிற் பெரும்பாலோராவர். ஆகவே "ஜாட்" என்றாலே இழிதொழில் செய்பவன் என்று கருதப்பட்டு வந்தது போலும் அதுவே மேற்கூறிய வழக்காற்றிற்கு ஏதுவாயிற்றே!

(கா. சிவ. க.)

## தனிச் செய்யுள்

**குறிப்பு:** சிலம்பு 14 பரல் 8-ல் பொருள் கேட்டிருந்த தனிப் பாடலுக்கு இஃது உரையாம்.

"சருவரிச் சந்திரகலைக்கு வளைத்திருக்கும் புள்ளில்
வளைதமிழோர் கொண்ட
வெருவரிச் சந்திரகலைக் குவளைத்திருக் குழையன்
சகனூர் மேவுசீர் போற்
றருவரிச் சந்திரகலைக்கு வளைத்திருக்குக் கணி
யெனச் செய்தாளா சங்க
திருவரிச் சந்திரகலைக்கு வளைத்திருக் குமரி
யொடணை செங்கண் மாலே."

| | |
|---|---|
| சருவரி | இராக்காலத்தில் தோன்றுகின்ற |
| சந்திரகலைக்கு | நிலவுக்கு |
| வளைத்திருக்கும் | கூட்டமாகவிருக்கும் |
| புள்ளில் | நேமியம் புள் போல |
| வளை | (வட்டமாக) வளைந்திருக்கின்ற |
| தமிழோர் | தமிழகத்தோர் |
| கொண்ட | உட்கொண்ட |
| வெருவு | அச்சத்தை |
| அரி | அழித்த |
| சம் | உடனாகிய |
| திர | வெற்றியையுடைய |
| கலை | நூல்களால் புகழப்படுகின்ற |
| குவளை | குவளைப் பூ வடிவாகிய |
| திருக்குழையன் | அழகிய குண்டலத்தையுடைய சிவபெருமானுக்கு |
| சகன் | தோழனாகிய குபேரனது |
| ஊர் மேவு சீர்போல் | ஊராகிய அழகாபுரியில் பொருந்திய செல்வம் போல |
| தரு அரிச்சந்திர | (செல்வங்களை) இரவலருக்குக் கொடுக்கின்ற அரிச்சந்திரனை ஒத்தவனே |
| கலை குவளை | மானையும் குவளை மலரையும் ஒத்த |
| திருக்குக்கு | கண்களுக்கு |
| அணியெனச் செய் | அலங்காரமான பொருளாகச் செய்கின்ற |
| தாளா | தாளையுடையவளே! |
| சங்கு அதிர் உவரி | சங்கு முழங்குகின்ற கடலில் |
| சம் திர | பிறந்த உறுதியான |
| கல் ஐ | கல்வியையுடைய, தலைமையான |
| கு | பொறுமையுடைய |
| வளை | வளையல் அணிந்த பெண்ணோடு |
| திரு குமரியொடு | அழகிய (இலக்குமியை யொத்த) இப் |
| அணை | சேர்ந்தின்பம் தருகுவாய் |
| செங்கண் மாலே | செங்கண் மாலனையவனே! |

—"நவாலியூர்" யாழ்ப்பாணம் க. வேலுப்பிள்ளை

# செய்திகளும் குறிப்புகளும்:
# News and Notes

## திவான் பகதூர் சர். T. N. சிவஞானம் பிள்ளை அவர்கள் B. A, இரங்கற் கூட்டம்

திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச்சங்கத் தலைவர் திருவாளர். திவான்பகதூர் சர். தி. நெ. சிவஞானம் பிள்ளை அவர்கள் பி. ஏ., 13-6-'36 சனிக்கிழமை காலை சிவனடி சேர்ந்தமையின், சங்கத்துக்கு ஏற்பட்டுள்ள பிரிவுத்துயரைத் தெரிவிக்கும் "இரங்கற் பொதுக்கூட்டம்" ஒன்று (27-6-'36) சனிக்கிழமை மாலை 5-30. மணிக்குத் திருநெல்வேலி "தாயம் மையம்மாள் பெண் கல்விச்சாலையில்" திருவாளர் M.S. பூர்ண லிங்கம்பிள்ளை யவர்கள் பி. ஏ., எல். டி. தலைமையிற் கூடியது.

அக்கூட்டத்தில் திருவாளர்கள் T. A. காந்திமதிநாத பிள்ளை பி. ஏ., இ. மு. சுப்பிரமணிய பிள்ளை, T. பிறவிப்பெரு மாள் பிள்ளையன், T. S. பரமசிவன் பிள்ளை, மா. வெ. நெல்லை யப்ப பிள்ளை பி. ஏ, இலக்குமணப்பெருமாள் பிள்ளை, பி. ஏ. T. M. பாண்டிப்பெருமாள் பிள்ளை, பு. சி. புன்னைவனநாத முதலியார் முதலியவர்கள், பிள்ளையவர்களின் குணஞ் செயல், அன்பு, அறிவு, கடமை முதலியவற்றைப் பலபட எடுத் துரைத்தார்கள். பின்னர் அடியிற்கண்ட தீர்மானம் எல்லோ ராலும் எழுந்து நின்று ஒருமித்த மனதுடன் நிறைவேறியது.

### தீர்மானம்

"டிப்டி கலெக்டராகவும், திருநெல்வேலி நாட்டாண்மைக் கழக முதற் றலைவராகவும், சென்னை மாகாண வளர்நெறி யமைச்சராகவு மிருந்து பொதுநலத் தொண்டாற்றிய பெரி யாரும், திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச்சங்கத் தலைவரும் ஆகிய உயர் திருவாளர் திவான்பகதூர். சர். தி. நெ. சிவ ஞானம் பிள்ளையவர்கள், பி. ஏ., நிகழும் மெய்கண்டான் யாண்டு எஎ௰௩ வைகாசித் திங்கள் ௩௧-ம் நாள் (13-6-36) சனிக்கிழமை காலை இறைவனடிப்பேறெய்தி, நம்மைப் பிரிந்த மைக்காக இச்சங்கம் மிக வருந்துவதோடு அவ்வருத்தத்தை அவர்களுடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்து ஆறுதல் கூறுகின்றது."

மேலும், தென்னிந்திய தமிழ்ச்சங்கத்தின் முதற்றலைவராக விளங்கிச் சிறந்த பிள்ளையவர்கள் திருவுருப்படம் அமைத்து வைப்பதென்றும், அவர்கள் பெயர்ப் பதிவுடன் சங்கத் தேர்வுப் பரிசு ஒன்று வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டன.

---

## மறைமலையடிகள் அறுபதாம் ஆண்டுவிழா

15-7-36 புதன்கிழமை மாலை 6 மணிக்கு, திருநெல்வேலி தாயம்மையம்மாள் பெண்கல்விச்சாலையில் மறைத்திரு மறைமலையடிகளென்னும் சுவாமி வேதாசலம் அவர்களின் அறுபதாவதாண்டு நிறைவுவிழாக் கொண்டாட்டம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அவ்வமயம் உள்ளூர் வெளியூர்களிலிருந்து அறிஞர்களும் அன்பர்களும் பலர் வந்திருந்தார்கள். அவர்களில் திருவாளர்கள் வண்ணார்பேட்டை T. K. சிதம்பரநாத முதலியாரவர்கள், A. S. இலக்குமணப் பெருமாள்பிள்ளை, B. A, முனிசிபல் கௌன்சிலர், A. T வீரபத்திர பிள்ளை, T. M. சங்கரநாராயண பிள்ளை, சப்ரிஜிஸ்டிரார் சிவசங்கரஞ் செட்டியார் B. A., பொன்வணிகர் மு. சுப்பிரமணியன் செட்டியார், ஆசிரியர்-வேங்கடராம அய்யர், S முருகாவுடையபிள்ளை முதலியோர் முக்கியமானவர்கள். முதலில் விழாவிற்கு வந்திருந்த எல்லோருக்கும் சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன பின்னர் சிந்துபூந்துறை ரிட்டயர்டு தாசில்தார் சைவத்திருவாளர், M. V. நெல்லயப்ப பிள்ளை, B. A. அவர்கள் தலைமை பூண்டு தம்முன்னுரையில் தமிழ் மொழியின் சிறப்பைக் குறித்தும், அடிகள் தமிழ் மெழிக்குச் செய்தா பெருந் தொண்டைப் பற்றியும் விரிவாகக் கூறினார்கள்.

பின்னர், சங்க அமைச்சர் திருவாளர். வித்வான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள் பேசியதில், அடிகள் தமிழுக்குச் செய்ததொண்டு மிக விழுமியதாகும் எனவும், சங்ககாலத்துப் பழந்தமிழ்நூல்களைப்பற்றியும், சைவசமயத்தைப்பற்றியும் விரிவுரை நிகழ்த்துங்கால் அவையிலுள்ள அறிஞர்கள் யாவரும் விரிவுரையைக்கேட்டுக் கழிபேருவகை எய்துவார்கள் எனவும், அடிகள் பலதுறைகளிலும் நூல் இயற்றித் தமிழ் மக்களுக்குதவியருளிய பெருஞ்செயலுக்கு நாம் என்றுங் கடப்பாடுடையோம் எனவுங்கூறி, அடிகள் இன்னும் பல்லாண்டுகள் நலமுடனிருந்து தமிழன்னைக்கு

அரும் பெருந்தொண்டாற்றிவர இறைவனை வேண்டுவதாகவும் பேசி முடித்தார்கள்.

அப்பால், முன்னீர்ப்பள்ளம் பேராசிரியர் திரு. M. S. பூர்ணலிங்கம் பிள்ளை, B. A. L. T. அவர்கள், அடிகளின் அருமை பெருமைகளை யெடுத்துக்கூறிப் பின்வரும் வாழ்த்துப்பாவைக் கூறினார்கள்:—

"சென்னை மாநகரில் கிறித்தவக்கல்லூரியில்
முன்னை நாட்பண்டிதர் வேதாசலமெனும்
மறைத்திருவாளர் மறைமலை யடிகளின்
அறுபதாமாண்டு ஆனித்திங்களின்
அறுதியாம்புதனுள் அஃதினைப் போற்றுதும்
தமிழ்த்தாய் மொழியின் தாதாவெனப்படும்
இலக்கியப் புலவர் இலங்குரையாளர்
அறிவியல் விளக்கும் ஆன்ற ஆசிரியர்
சைவ சித்தாந்தச் சுடரொளி பரப்புவர்
பொது நிலைக்கழகம் புத்தகம் நிறுவினர்
ஞானசாகரமெனுந் தமிழ்ப் பெருங்கடலும்
அறிவினுழியாம் ஆங்கிலப் பௌவமும்
திங்களொருமுறை தோன்றித் திகழும்
இருமதி யொருமுறை யிசையொடுமிளிரும்
ஆரியமுந் தமிழாங்கிலக் கலைகளும்
ஆய்ந்தாய்ந்துணர்ந்து அரும்பொருள் நிதியும்
மாய்ந்திடா வண்ணம் மாந்தர்க் குதவியும்
விளங்கப் பொழிந்தும் வரைந்து மளித்துளர்
வித்தகச் செல்வர் விபுலரெம் மன்பர்
புத்த நிலையம் பொழிலெனப் பிறங்க
எழுத்தகம் அழுத்தகம் யாவையு மமைத்துளர்
அமிழ்தெனு மரனணி அழகுறு கண்டியும்
தமிழ்த் திருநீறும் தமிழைந்தெழுத்தும்
தமிழ்த்தவர் கொண்டு தாஞ்சதமுய்யவும்,
இமிழ் கடலுலகி லிறையருள் புரிகவே."

பின்பு முன்னீர்ப்பள்ளம் தமிழாசிரியர். திரு. மு. பொ ஈசுரமூர்த்தியாபிள்ளை அடிகளின் சிறப்பையும் தமிழ்த் தொண்டையும் எடுத்துக்கூறி அடிகள் இன்னும் பல்லாண்டுகள் நலமுடனிருந்து தமிழ்ப்பணியாற்றி இன்புறுமாறு இறைவனருளை வேண்டுவதாகவும் கூறினார்கள். அப்பால் பாளையங்கோட்டை அர்ச்சவேரியார் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் A. அருளப்பன் B. A, அவர்களும் ஸ்ரீமந்திர மூர்த்தி ஹைஸ்கூல் தமிழாசிரியர் திரு R. முத்து அய்யர், அவர்களும் அனுப்பிய வாழ்த்துரைகள் வாசிக்கப்பட்டன.

பின்னர், தலைவர் தமது முடிவுரையாகப் பேசுகையில் அறிவு விளக்கத்தில் திருந்தியவர்களாய்ப் பிறரையும் திருந் தும்படி செய்யும் பெரியோர்களே நம்மனோரால் பாராட்டப் படக்கூடியவர்கள். நமது தமிழன்னைக்கும் சைவ சமயத்திற் கும் சிறந்த தொண்டாற்றும் நமது இளைஞர்களுக்கும் இன்று கொண்டாடப் பெறும் அடிகள் ஒரு எடுத்துக்காட்டாக் உள்ளார்கள். அடிகள் நீண்டகாலமிருந்து தமிழ் மொழிக கும் சைவத்திற்கும் சிறந்த பணியாற்றி வருமாறு இறைவனை வேண்டுவதாகவும் கூறிமுடித்தார்கள்.

முடிவில் அடியிற்கண்ட தீர்மானம் கடைய நல்லூர் போர்டு உயர்தரப்பாடசாலைத் தமிழாசிரியர் திரு இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்களால் முன் மொழியப்பெற்று சப்ரிஜிஸ்டிரார் திரு. சிவசங்கரஞ் செட்டியார் அவர்களால் வழிமொழியப்பெற்று யாவராலும் முழுமனதுடன் ஒப்புக் கொள்ளப்பட்டு நிறைவேறியது.

தீர்மானம்:—சென்னைக்கிறித்தவகல்லூரித் தமிழாசிரிய ராயிருந்தவரும், செந்தமிழணங்கின் திருப்புதல்வரும், இவ் விருபதாம் நூற்றாண்டில் இலக்கியம் இலக்கணம் சமயம் ஆகிய பகுதி நூல்களில் தக்கபயிற்சியும் தேர்ச்சியும் வாய்ந்தவரும், அவ்வப்பகுதிகளில் அழகியமுறையில் பல ஆராய்ச்சி நூல்கள் எழுதிப் பைந்தமிழை வளர்த்து வருபவரும், தமிழுலகத்தில் பெரிய அவைக்களங்கட்குச் சென்று சீரிய பெருஞ் சொல் வழங்கும் தெள்ளறிவுச் சொல்வன்மை யாளரும் ஆகிய மறைத்திரு. மறைமலையடிகள் என்னும் சுவாமி வேதாசலம் இப்பொழுது தம் அறுபதாண்டு நிறைவெய்தியுள்ளார் களென்பதறிய இக்கூட்டம் பெருமகிழ் வடைவதுடன், இறைவன் திருவருளால் எண்பதுக்கு மேலுமிருந்து தனித் தமிழுக்கும் சைவத்துக்கும் மேலும் சிறந்த பணியாற்றி இன்புறவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவன் திரு வருளைப் பெரிதும் வேண்டுகின்றது.

---

# மதிப்புரை

## அகநூல்

அக நூலாவது மனிதனுடைய வாழ்க்கையைப்பற்றிக் கூறும் நூல். இவ்வாழ்க்கைக்கு முக்கிய சாதனம் மனமாதலால் இந்நூல் அக நூல் எனப்பட்டது.

நூல்களின் பயன் கற்போருக்கு அறிவைக்கொடுத்து அவர்களுடைய ஆற்றலை ஏற்றுதலாம். அகநூலானது வாழ்க்கைத் துறைக்கு வேண்டிய அறிவைக் கொடுத்து நல் வாழ்க்கைக்கு வேண்டிய ஆற்றலை ஏற்றுதற்குத் துணையாகத்தக்கது. மனிதன் தனிமையாக வாழாமற் பிறரோடு கலந்து வாழ வேண்டியிருத்தலால் தனக்கும் பிறருக்கும் நன்மை யுண்டாக வாழ்தலே நல்வாழ்க்கை யெனப்படும். அங்ஙனம் ஒருவன் நல்லவனாக வாழவேண்டுமாயின் அவன் தன்னுடைய தன்மையையும் பிறருடைய தன்மையையும் அறிதல் அவசியம். இவற்றைப் பிழையின்றி அறிதற்கு அக நூலறிவு வேண்டியது.

அக நூலுணர்ச்சியின்மையால் சிலர் மனிதருடைய தன்மையிலுள்ள வேறுபாடுகளைச் சிந்தியாமல் மற்றவர்களுந் தங்களைப் போன்றவர்கள் என்று கருதி இடர்ப்படுகின்றனர். சீவனத் தொழிலை நிச்சயித்தற்கும் அக நூல் துணைபுரியும். அக நூல் முறையினாலே மனிதருடைய ஆற்றல்களை ஒருவாறு அளவிடலாம். அளந்தபின்பு அந்தந்த ஆற்றலுக்குத் தக்க தொழிலைத் துணிந்து கொள்ளலாம் அப்படித் துணிந்து கொண்டால் ஒவ்வொருவனும் தன் தன் தொழிலைச் சோர்வின்றிச் செய்வான்; தொழிலினாற் பெரும்பலனையும் பெறுவான். அநேகர் தமது ஆற்றலுக்குத் தகாத தொழிலை மேற்கொண்டு துன்பப்படுகின்றனர்.

எல்லாவற்றிலும் மேலானதாய் அக நூலின் முக்கிய பயனாயுள்ளது மனிதன் தன்னை அறிதலாம். சந்திர சூரியர்களின் தன்மையையும் காற்று மழைகளின் காரணங்களையும் முக்கோண விருத்தங்களின் இயல்பையும், அனல் ஒளி மின்களின் தர்மங்களையும், சடப்பொருள்களின் தோற்றத்தையும், புல் பூண்டு விலங்கு பறவை முதலியவற்றின் சுபாவங்களையும் அறிதலினும்பார்க்கத் தன்னுடைய தன்மைகளை அறிதல் மனிதனுக்கு மிக முக்கியமானது. எமது எண்ணங்கள் இச்சைகள் சுவைகள் வேதனைகள் எப்படியுண்டாகின் என்றன் பதை அறிதல் எமக்குப் பெரும் பயனைத் தருதலு

மன்றி மிகத் திருப்திகரமாயு மிருக்கும். நாம் எண்ணத்தகாதவற்றை எண்ணுதற்கும் விரும்பத்தகாதவற்றை விரும்புதற்கும் செய்யத்தகாதவற்றைச் செய்தற்கும் காரணமென்ன என்பதை நாம் அறிதல் அவசியம். ஆதலால்ஒவ்வொருவரும் அகநூலைக் கற்க வேண்டியது அத்தியாவசியமாம்.

இத்தகைய நூல் தமிழில் இதுகாறும் இல்லாக் குறையை நீக்கக்கருதி இந்நாள் வளர்ச்சிக் கேற்றவாறு ஆங்கிலக் கொள்கைகளைத் தழுவி இந்நூல் எளிய வசனநடையில் ஸ்ரீமான் சு. சிவபாத சுந்தரம் பிள்ளையவர்களால் எழுதி அச்சிடப்பட்டுள்ளது. ஆசிரியர்க்கு வேண்டும் போதனைமுறைகள் ஆங்காங்கே காட்டப்பட்டிருத்தலால் இந்நூல் அவர்களுக்கு முக்கியமாக வேண்டற் பாலது. இலங்கை அரசினரால் இது ஆசிரியன்மார்களுக்குப் பாடபுத்தகமாக நியமிக்கப் பட்டுளது. இதன் விலை ரூ.1—6—0. வேண்டுவோர் எமக்கெழுதிப் பெறலாம்.

---

## அண்ணாமலைப் பல்கலைக் கழக அறிவிப்பு

கல்லூரிக் கல்விக்குப் பயன் படும் வகையில் பல்கலைக் கழகத்தார் வகுத்துள்ள திட்டப்படி "பொருள் நூல்" (Physics) ஒன்றைத் தமிழில் இயற்றித் தருபவர்களில் சிறந்தவருக்கு ரூ. 1000 பரிசு கொடுக்கப்படும். திட்டம் பல்கலைக் கழக நிலையத்திற் கிடைக்கும்.

பரிசு கொடுக்கும் வகையில், தொகை முழுவதையும் கொடுப்பதோ, குறைவாகக் கொடுப்பதோ கொடுக்காமலே நிறுத்தி விடுவதோ ஆகிய இவையெல்லாம் பல்கலைக் கழகச் செயலாளர் குழுவைப் பொறுத்தது. அக்குழுவினர் முடிபு முடிந்த முடிபாகும். ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல் பல்கலைக் கழகத்தாரின் உரிமைக்குள்ளாகிவிடும்.

நூல் 1938-ம் ஆண்டு ஜூலை 31-ம் நாளுக்குள் பல்கலைக் கழக ரெஜிஸ்ட்ராருக்கு ரெஜிஸ்டர் செய்து அனுப்பப்படவேண்டும். நூலெழுதுவோர் அதன்கண் தம் பெயரை எழுதக்கூடாது; புனை பெயரொன்றையே எழுதவேண்டும். முத்திரையிட்ட ஓர் உறையுள் அப்புனைபெயரையும், இயற் பெயரையும் முகவரிக் குறிப்பு விவரங்களையும் தனிப்பட எழுதியனுப்பவேண்டும்.

---